தென்மொழி

தென்மொழி நூலகம்
பாவலரேறு தமிழ்க்களம்
-601 302



அப்பாத்துரையார் எனும்-

தப்பாய்த் தவறாய்த் தமக்காய்ப்
படிக்கும் தரகரிடை
உப்பாய் உணவாய் உடம்பாய்த்
தமிழை உயிர்த்திருந்து,
'முப்பால் ஒளி'யாய் முகிழ்த்து
'மணிவிளக்' காய்எரித்த
அப்பாத் துரையார் எனும்அறி
வாட்சி அடங்கியதே!

(தொடர்ச்சி உள்ளே)

அறிவாட்சி அடங்கியதே!

சுவடி : 25
ஓலை : 1

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா:2-00

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

○ : 1359 : பெருந்தகை பாவலரேறு அய்யா அவர்கட்கு வணக்கம்... நாங்கள் எங்கள் பகுதியில் 'புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் இலக்கிய மன்றம்' என ஓர் அமைப்பை உருவாக்கி ஏறத்தாழ ஓர் ஆண்டாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். தங்களின் ஆழமான தமிழ்ப்பற்றும், அசைக்க முடியாத விடுதலையுணர்வும் எங்களை மெய்சிலிர்க்கச் செய்கின்றன. தங்களுக்கு என்றும் உதவியாக இருப்போம். அன்புள்ள:

—சி. வரதராசன், பெரங்கியம் (தெ. ஆ.)

○ : 1360 ; பேரன்பு மிக்க பெருந்தகை ஐயா,

வணக்கம். தென்மொழி சுவடி 24 ஒலை 11 கிடைத்தது. அதில், ''நடத்தத்தான் முடியவில்லை! நடத்தித்தான் ஆகவேண்டும்!'' என்ற தலைப்பில் இதழ்களைத் தொடர்ந்து நடத்துவது பற்றிய தங்களின் முடிவினைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன். இருப்பினும் பலவகை இடையூறுகளுக்கிடையே இதழ்களைத் தொடர்ந்து நடத்தித்தான் ஆகவேண்டும் என்பதற்கான கரணியங்களை நன்கு விளக்கியுள்ளீர்கள். தங்களின் முடிவினை மாற்றிக் கொண்டு; இதழ்களைத் தொடர்ந்து நடத்த உறுதி கொண்டமைக்கு நன்றி; வணக்கம். எம் போன்றோர் தொடர்ந்து துணை நிற்போமென்று உறுதி கூறுகிறேன்.

தற்போதைய கலைஞரின் ஆட்சியில் நம் இதழ்கள் நூலகங்களுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படுமென்று எதிர் பார்த்தோம். பல இதழ்களும் நூலகங்களுக்கு வருகின்றன. ஆனால் நம் இதழ்கள் ஒன்றுகூட வரவில்லை. நம் இதழ்களின்மீது அல்லது தங்களின் மீது கலைஞர்க்கு ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி இன்னும் தீரவில்லையா என்று விளங்கவில்லை. கலைஞர் தம்முடைய தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளை விட்டுவிட்டு, உண்மையாகவே தமிழுக்கும் தமிழினத்திற்கும் ஏற்றந்தரப் பாடுபடுவாராக! இனியேனும் உண்மைத் தமிழ்த் தொண்டர்களைப் போற்றிக் கொள்வார் என்று எதிர் பார்க்கிறோம். தங்கள் அன்புத் தொண்டர்,

—சித்தலைச்சாத்தன், உ. செல்லூர்.

○ · 1361 : பெருந்தகையீர், நனி வணக்கம்.

...எனது உறுப்பினர் கட்டணம் அனுப்பி உள்ளேன்...மேலும் மேலும் அறிவுத் தெளிவும், தன்மானமும் பெற 'தென்மொழி'-யைத் தொடர்ந்து என் வாழ்நாள் முழுவதும் படித்து இன்பம் பெற விழைகிறேன்: அருள் கூர்ந்து 'தென்மொழி' தனிக்கனித் தமிழ் நூலைப் படித்தறிய வாய்ப்பளிப்பின் என வேண்டுகிறேன். வாழ்க, வெல்க நும் தூய பணி தென்மொழி எமது விழி., விழி இன்றேல் வாழ்வு இல்லை. வணக்கம். அன்பன்,

—ந. உமாபதி, காரைக்குடி-2.

○ 1362 : பாவலரேறு அய்யா அவர்களுக்கு வணக்கம். தாங்களனுப்பிய பழைய சலுகை விலைத் தென்மொழி, தமிழ்ச் சிட்டு இதழ்கள் வந்து சேர்ந்தன. பல மாணவர்களுக்குப்படிக்க வாய்ப்புக் கிடைத்தது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தங்களுக்

(அட்டைப் பாடல் தொடர்ச்சி)

ஒப்பாய்த் தமிழ்கற்(று) உரைவிற்(று)
உயிர்வாழ் உடல்களிடை
மப்பாய்த் திரண்டு மழையாய்ப்
பொழிந்து தமிழ்வளர்த்துக்
கொப்பாய்க் கிளையாய் மலராய்க்
கனியாய்க் குலம்புரந்த
அப்பாத் துரையார் எனும்தமிழ்
மூச்சிங் கொடுங்கியதே!

செப்போ இரும்போ மரமோ
மணலோ எதுதரினும்
எப்போ திருந்தமிழ் மாறி
உயிர்வாழ் இழிஞரிடை
முப்போ திலுந்தமிழ் ஆய்ந்தே
களைத்த மொழிப்புலவர்
அப்பாத் துரையார் எனும்மூ
தறிவும் அயர்ந்ததுவே!

ஒருமொழிப் புலமை உறற்கே
வாணுள் ஒழியுமெனில்,
இருமொழி யன்று,பன் மூன்று
மொழிகள் இருந்தகழ்ந்தே
திருமொழி எனநந் தீந்தமிழ்த்
தாயைத் தெரிந்துயர்த்திக்
கருவிழி போலும் கருதிய
கண்ணும் கவிழ்ந்ததுவே!

குமரிஆ ரல்வாய் குமிழ்த்தமுத்
தம்மைக்குக் காசிநாதர்
திமிரிப் பயந்தஅப் பாத்துரை
என்னும் திருவளர்ந்து
நிமிர்த்துத் தமிழ்மொழி நீணில
மெங்கும் நிலைப்படுத்தும்
அமரிற் படுத்திங் கயர்ந்ததே
ஆரினி ஆந்துணையே!

செந்தமிழ் ஆங்கிலம் இந்தி
பிரெஞ்சு செருமனுடன்
வந்தச மற்கிரு தம்ருசி
யம்சப்பான் என்றயல்சார்
முந்துபன் மூன்று மொழிபயின்
றேபன் மொழிப்புலமை
வெந்துநீ றனதே, தாய்ப்புலம்
விம்ம வெறுமையுற்றே!

அப்பாத்துரையார்
அறிவைப் பேணாத அரசு!



அறிவு பல துறையினது; எனவே அறிஞர்களும் பல துறையினர் ஆவர். தமிழ் எனும் மொழித் துறையும் அதன் புலமைத் துறையும் பற்பல, தமிழில் கலைகளும். பண்பியல்களும், புறத்துறையைச் சார்ந்த அறிவு நிலைகள். தமிழின் மொழியியலும்; சொல்லியலும் ஒலியியலும் அதன் அகத்துறையைச் சார்ந்த அறிவு நிலைகள், இசை, இயல், நாடகம் என்பன கலைத்துறை அறிவு நிலைகள். அவற்றுள் இலக்கியமும் இலக்கணமும் இயல்துறையைச் சார்ந்தவை. அறநூல்களும் வாழ்வியல் நூல்களும் பண்பியலைச் சார்ந்தவை. மொழியியலும் அது சார்ந்த இனவியலும் வரலாற்றைச் சார்ந்தவை. இன்னோரன்ன பல்துறைத் தமிழ் அறிவியலில் தனித்தனித் துறையறிவும், பல்துறை அறிவும் சான்ற பேரறிஞர்கள் பலர் அன்றுந் தோன்றினர்; இன்றுந் தோன்றி இருந்து சிறந்து வருகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே படித்தாய் வளர்ந்தவருமிலர்; வாழ்ந்தவரும் இலர். அவர்களை அடையாளங் கண்டு கொண்டவரும் கொள்பவரும் மிகச் சிலரே!

வாழ்க்கை என்பது வெறும் உயிர் வாழ்தல், பொருளியல் துய்ப்புகளில் மேம்படுதல் என்பன மட்டுமே பொருள் பெறுமாயின், அறிவு வாழ்க்கையே பொருளற்றதாகப் போய்விடும். அறிஞர்களோ பிறவியிலேயே உயர் உணர்வு பெற்றவர்களாக, வாழ்வியலில் அக்கறை கொள்ளாமல், அறிவுத் துறைகளிலேயே தம்மை மூழ்கடித்துக் கொண்ட முழு மாந்தர்களாக வாழ்ந்து சிறப்பவர்களாவர். எனவே அன்றும் இன்றும் என்றும், வறுமை அவர்களுக்கு உயிருடைமையாகவே உள்ளது.

அவ்வறிஞர்கள் வரிசையில் நம் தமிழறிஞர்கள் தொன்று தொட்டு வறுமையிலேயே செம்மையைக் கண்டவர்களாக இருந்து வருவதை வரலாறு உறுதி கூறும். அறிவு முனைப்பால் முழுமை பெற்றவர்களாதலின், அவர்கள் தம் ஊனுடம்பு ஓம்பும் வெற்று வாழ்க்கைக்காக, எதற்காகவும் எவரிடத்தும் எப்பொழுதும் கூனல் எய்தாக் கொள்கையாளர்களாக இருந்து, தாம் பேசும் தண்டமிழ்க்கும் தாம் வாழும் இனத்துக்கும், தாம் பிறந்த நிலத்துக்கும் அரிய பல தொண்டுகளாற்றி, இறுதி வரை, வாழ்வியலுக்கு உறுதி பயப்பதாம் பொருள் நிலையில் ஓர் இம்மியும் உயராது, வறுமையிலேயே வாழ்ந்து வெறுமையிலேயே மறைவோராக இருக்கின்றனர்.

அவ்வருந்தமிழ்ச் சான்றோர்களுள், அண்மைக் காலத்தே நம்மிடையே தோன்றியிருந்து அரிய பல அறிவுத் தொண்டாற்றி, இறுதியில் கலங்கிய நெஞ்சொடும், கண்ணீர் விழியொடும், காலச் சுழலில் மாய்ந்து போனவர்களான இரு பெரும் புலவர்கள்,

Scanned with CamScanner

என்றென்றும் இவ்வினமும் நிலமும் நினைக்கத் தக்க சான்றோர்கள் ஆவர். அவர்கள் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரும், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையாரும் ஆவார்கள். இவருள் பாவாணரை என் வாழ்வில் நாற்பத்தைந்தாண்டுக் காலம் அருகிருந்து பார்த்தேன்; பன்மொழிப் புலவரை கடந்த முப்பதாண்டுகளாக என் அகத்திருந்து பார்த்தேன்.

இவர்கள் இருவரும் இவ்விருபதாம் நூற்றாண்டுப் புலமைக்கு இரண்டு மேரு மலைகள்; மறைந்த குமரிக் கண்டத்து ஓடியிருந்த பஃறுளியாறும், குமரியாறும் போன்றவர்கள்; கழகப் புலவருள் பரணரும் கபிலரும் போன்ற பெரு மக்கள்! மொழியையும் இனத்தையும் தூக்கி நிறுத்த வந்த நுண்ணறிவாளர்கள். இவர்கள் காலத்து மற்ற பிற புலவர்களை விண்மீன்கள் என்றால், இவர்கள் கதிரவனும் நிலவும் போன்ற அந்தணாளர்கள்; செந்தமிழ் அறவோர்கள்; தொண்டுத் தவம் இயற்றிய தீந்தமிழ்த்துறவோர்கள்!

பாவாணர்க்கும் பன்மொழிப் புலவர்க்கும் நெருங்கிய உளத் தொடர்பும், கொள்கைத் தொடர்பும், அறிவுத் தொடர்பும் உண்டு. உழைப்பில் இருவரும் ஊக்கம் இழக்காத ஓர் ஏர் உழவர்கள். யாருக்கும் அஞ்சாத வல்லரிமாக்கள்! தண்டமிழ்த்தாயின் தவப்பெரும் புதல்வர்கள்; வறுமையில் செம்மை காத்த பெருமையாளர்கள்! மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் கொண்ட நல் உரவோர்கள்!

தமிழகத்தில் பொதுவான அறிஞர்கள், புலவர்கள், பேராசிரியர்கள் பற்பலர் அவ்வப்போது தோன்றுகின்றனர்; பல அருஞ்செயல்களைக் கூடச் செய்கின்றனர்; செய்தும் வருகின்றனர். ஆனால், அவர்கள் அனைவரும் ஒரே தரத்தினர், அறிவுத் திறத்தினர் அல்லர். அவரவர்களுக்கு அவரவர்களுடைய வாழ்க்கைக்குத் தமிழ் ஒரு பிழைப்புக் கருவி. அவர்கள் தமிழைப் படித்தனர்; அல்லது கற்றனர்; அதில் புலமை பெற்றனர்; அல்லது ஆசிரியத் தன்மை பெற்றனர்; வாழ்வுற்றனர். ஆனால் பாவாணரைப் போலும், அப்பாத்துரையார் போலும் தமிழ் அறிஞர்களும் பெரும் கொள்கைப் புவவர்களும் எப்போழுதோ ஒருமுறை, ஓரிரு கால கட்டத்திற்குள்தாம் பிறந்து தம்மால் தமிழையும் தமிழால் தம்மையும் மேம்படுத்தும் அரும்பெறல் முயற்சியில் ஈடுபடுகின்றனர். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய அல்லது ஆற்றி வரும் தொண்டுக்குப் புலவர்கள் பிறர் அத்தனையரும் இணைந்து ஆற்றிய அல்லது ஆற்றிவரும் தொண்டும் ஈடாகாது என்று உறுதியாய் மெய்ப்பித்துக் காட்ட முடியும்.

அத்தகைய கொள்கைப் புலவோர்கள் தமிழுக்கு ஆற்றியது தான்-ஆற்றி வருவதுதான் தொண்டு-என்னும் பெருமை பெறக் கூடியது. புறநிலையில் அவர்போல் வைத்து எண்ணக் கூடிய புலவர்கள் பிறர் செய்வது பணி; தமிழ்ப் பணி! அல்லது ஆசிரியப் பணி; பேராசிரியப் பணி! எனவே தமிழும், தமிழினமும் தமிழ்நாடும் பாவாணர், அப்பாத்துரையார் போலும் தனிமுதல் பேராசிரியர்களால்—அவர்கள் வாழ்க்கையையே ஈடு வைத்து

ஆற்றிய தொண்டால்—பெருமையுற்றன; நிலைமை பெற்றன; சிறப்புப் பெற்று வருகின்றன.

இவர்களுள் பாவாணர் தமிழ்மொழி ஆய்வில் தனிக்குன்றம் எனச் சிறந்து விளங்கினர். பன்மொழிப் புலவர் திராவிட மொழி ஆய்விலும் வரலாற்றிலும் தமிழையும் தமிழரையும் தமிழ்நாட்டையும் மேம்பாடு உறச் செய்தார். ஆனால் நம் நெடு வரலாற்று முடக்கடைப்பிடியால் இருவரும் குன்றின் மேலிட்ட விளக்காக வாழாமல், குடத்துள் சுடர்ந்த விளக்குப் போல் நலங்குன்றி, வளங்குன்றி வறுமையிலேயே பெருமூச்செறிந்து உயிர் தவிர்க்கலாயினர். இது கழிபெரும் இரங்கல்! நாம் கழித்துக் கட்ட வேண்டிய புலமைப் புறக்கணிப்பு! இப்பிழைக்கு நாமும் நம்மையாளும் அரசும் பெருந்தண்டனை ஏற்கத் தக்கவர்கள்! நாணித் தலைகுனிய வேண்டியவர்கள்!

பாவாணர் மறைந்த பொழுது அவர் செய்ய வேண்டிய பணி, முற்றுப் பெறுமல் பரந்துபட்டு நின்றது. அவர் ஏறத்தாழ இருபத்தைந்து நூல்கள் எழுதி இத்தமிழுலகு பயன்பெறத் தந்து சென்றார். ஆனல் பன்மொழிப் புலவரோ ஏறத்தாழ நூற்று எண்பது நூல்களுக்குப் பேராசிரியராக விருந்து அறிவாளுமை செய்து மறைந்தார். இருவரும் இன்னும் எழுதி முடிக்க வேண்டிய அறிவு நூல்கள் பல உள. அம் முடிக்கப் பெறு நூல்கள் இவ்விருவர் பாங்கிலிருந்தும் நமக்குக் கிடைக்கப் பெறுமற் போனது நம் போகூழே! நாமேதாம் அவர்கள் தம் பணியில் முற்றுப் பெறுமற் சென்றதற்கு முழுக் காரணர்களாகப் பொறுப் பேற்றுக் கொள்ளுதல் வேண்டும். இது நமக்கு மட்டுமன்று. நம் மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் நாமே ஏற்படுத்திக் கொண்ட பெரும் பேரிழப்பாகும்! எதிர்காலம் நம்மைப் பொறுத்துக் கொள்ளாது.

நம் பெருமைக்குரிய பன்மொழிப் பலவர் அப்பாத்துரையார் அவர்கள் பாவாணர் மறைந்த எட்டாண்டுகள் கழித்து மறைந்துள்ளார். பாவாணர் மறைந்த பின்னே நாமும் நம் அரசும் விழித்துக் கொண்டிருந்தாலும் நம் பன்மொழிப் புலவரை இன்னும் சில காலத்திற்குப் புரந்து பேணி அவர் எச்ச அறிவாட்சியை நீட்டித்திருக்க வழி செய்திருக்கலாம். அதன் வழி அவர் அறிவால் இம்மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் கிடைத்திருக்க வேண்டிய அறிவுக் கருவூலங்களைக் கிடைக்கச் செய்திருக்கலாம். ஆனல், நாம் தாம் போற்றிக் கொள்ள வேண்டிய பெரும் புலமையை மண்ணில் போட்டுப் புதைத்து விட்டு, அப் புதை மேடையில் நின்று மறைந்து போன புலவர்க்குப் போற்றுதலுரையும், விழா வேடிக்கையும் செய்து நிறைவுறு-வோர்கள் ஆயிற்றே! என் செய்வது?

இனி, பன்மொழிப் புலவர் தம் வாழ்வியல் நிலைகளை நன்றி-யுடன் நினைந்து வியந்து போற்றுதல் செய்வோம்.

புலவரவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரல் வாய்மொழி எனும் சிற்றூரில் 24-6-1907-ஆம் ஆண்டுப் பிறந்தார்

பெற்றோர் முத்தம்மாளும் காசிநாதரும் ஆவர். சிறு அகவைப் பொழுதிருந்தே தமிழுணர்வும் தமிழின உணர்வும் அவருள் காழ் கொண்டிருந்தன. எதையும் விரைந்து கற்கும் ஆர்வமும், கற்றவற்றை நினைவில் இருத்திக் கொள்ளும் திறமும் இயற்கையாகவே வாய்க்கப் பெற்றவராகையால், அவர் தமிழுடன் ஆங்கிலம், சமசுக்கிருதம், மலையாளம், இந்தி ஆகிய ஐந்து மொழிகளையும் பள்ளிப் பருவத்திலேயே எளிதாகக் கற்றுத் தேர்ந்தார். தொடக்கத்தில் ஆங்கிலத்திலேயே மதிதகு இளங்கலை ஆங்கிலப்பட்டம் B. A. (Hon's) பெற்றார். பின்னர் தமிழில் முதுகலை (M. A.) தேர்வுற்றார். தமிழில் முதுகலை பட்டம் பெறுவதற்கு முன்னரேயே இந்தியில் விசாரத் (B.A.வுக்குச் சமமானது) பட்டம் பெற்றது பெருவியப்பே!

பின்னர், தெலுங்கு, கன்னடம், மராத்தி, குசராத்தி போலும் திரவிட மொழிகளையும், அரபு, சப்பான், ஈபுரு, மலாய் ஆகிய ஆசிய மொழிகளையும், பிரெஞ்சு, செர்மன், உருசியம், இத்தாலி முதலிய ஐரோப்பிய மொழிகளையும் ஆர்வத்தால் தொடர்ந்து கற்றுப் பன்மொழிப் புலவர் என்ற தனிச் சிறப்புப் பெற்றார். தமிழகத்தில் பன்மொழிப் புலவர் என்று அழைக்கும் தகுதி பெற்றவர் நம் பெருமதிப்பிற்குரிய கா. அப்பாத்துரையார் ஒருவரே! இனி வருங்காலத்தில்கூட இப்பன்மொழிப் புலமைத் தகுதிபெறும் ஒருவர் தோன்றுவார் என்பதற் குறுதியில்லை. ஒரு மொழிப் புலமை எய்துவதற்கே ஒருவர் வாழ்நாள் முழுமையும் செல விட்டாலும் போதாது என்னும் நிலை இயல்பானதாயிருக்க, பன்மொழிப் புலமை பெறுவதென்பது செய்தற்கரிய செயலே அன்றோ?

நம் பேரறிஞர் அவர்கள் தொடக்கத்தில் அரசுப் பணியாளர், ஆசிரியர், இதழாசிரியர் எனப் பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். நூலாசிரியர் என்னும் நிலையில் இவர் தமிழகத்தின் தனிநிலைப் பேராசிரியராக விளங்குவது பெருமைப்படத்தக்கது. இதுவரை வெளிவந்த அவருடைய நூற்களே ஏறத்தாழ 180 அளவில் இருக்கும். (சரியான கணக்கு எடுக்கப் பெற்று வருகிறது.) இலக்கியம், வரலாறு, மொழியாய்வு, மக்கள் வரலாறு, திருக்குறள், சமயம், மெய்ப் பொருளியல், ஆராய்ச்சி முதலிய பல்வேறு துறைகளில் பல அரிய நூல்களை இத் தமிழ் மொழிக்கும், இம்மக்களுக்கும் ஆக்கி வழங்கிய பெரும் பேராசிரியர், அவர்.

அவர் எழுதிய நூல்களுள் மிக முகாமையானவை: மொழியியலில், தென்மொழி, வளரும் தமிழ், மொழிவளம், Indias Language Problem (மறைமலையடிகளாரின் அரிய முன்னுரையைக் கொண்ட ஆங்கில நூல்). செந்தமிழ் இலக்கணம், கால்டுவெல் ஒப்பிலக்கணம் முதலியன; வரலாற்றியலில், தமிழக வரலாறு, இந்திய நாகரிகத்தின் திராவிடப் பண்பு, வருங்காலத் தமிழகம், குமரிக்கண்டம், தென்னாடு, தமிழ் முழக்கம், தமிழன் உரிமை, இதுதான் திராவிடநாடு, தாயகத்தின் அமைப்பு, ஆயிரத்து

Scanned with CamScanner

எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் இருகடற்கோள்கள். இந்திய மக்கள் விடுதலை வரலாறு, சரித்திரம் பேசுகிறது, கொங்குத் தமிழக வரலாறு (மூன்று பகுதிகள்), செஞ்சிக்கதை முதலியன; மாந்தவியலில், நல்வாழ்வுக் கட்டுரைகள், வாழும் வகை, சங்க காலப் புலவர், சமதர்ம விளக்கம், இல்லறமாண்பு, சங்க இலக்கிய மாண்பு, மக்களும் அமைப்புகளும், தென்னகப் பண்பு, முதலியன; இலக்கிய வியலில், சங்க இலக்கிய மாண்பு, செந்தமிழ்ச்செல்வம், சிலம்பு வழங்கும் செல்வம், உலக இலக்கியங்கள். மேனாட்டு இலக்கியக் கதைகள் (இரண்டு பகுதிகள்), அன்னை அருங்குறள் முதலியன. திருக்குறள் தொடர்பாக-வள்ளுவர் நிழல், திருக்குறள் மணி விளக்க உரை (6 பாகங்கள்), திருக்குறள் தெளிவுரை, திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு (ஏறத்தாழ ஆயிரம் பக்கங்கள் (Mind and Thought of Thiruvalluvar) முதலியன; அறிஞர்கள் வரலாற்று வரிசையில், ஆங்கிலப் புலவர் வரலாறு, அறிவுலக மேதை பெர்னார்டுசா, ஓவியக் கலைஞர் இரவி வர்மா, சேன்அயர், பெஞ்சமின் பிராங்களின், அறிவியல் முனைவர் ஐன்சுடீன், தனவாய் அரியநாதர், கிருட்டிண தேவராயர், சுபாசு சந்திரபோசு, வில்லியம் கூப்பரின் கடிதம், டேவிட் லிவிங்சுடன், ஐதர்அலி முதலியன; பொதுமை நூல்கள்-குடியரசு, பொதுவுடைமை, சமூக ஒப்பந்தம், முதலீடு (Capital), போதும் முதலாளித்தத்துவம், மே விழா முழக்கம், உலகம் சுற்றுகிறது, உயிரின் இயல்பு, எம். என். இராய் இயற்பொருள்வாதம், வாழ்க்கைப் பயிற்சி, அறிவுக்கடல், இன்பத்துள் இன்பம் முதலியன; கதை நூல்கள்—இரு நகரக் கதை, சேக்சுபியர் கதைக் கொத்து (நான்கு பாகங்கள்), விருந்து வரிசை: மாமனார் வீடு, முத்துமாலை, கடல் மறவர், கல்மனிதன், துன்பக்கேணி, நூர்சகான், மன்பதைக் கதைகள் (6 பாகங்கள்), விந்தைக் கதைகள் (4 பாகங்கள்), யாழ் நங்கை, மலைநாட்டுமங்கை, யுத்தக் கதைகள் முதலியன.

இனி, எழுத்தாக்கக் கொடுமுடியாகத் திகழும் நூல்கள், இவருடைய திருக்குறள் மணிவிளக்க உரை-6 பகுதிகளும், திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பும் (ஏறத்தாழ 1000 பக்கங்கள்), ஆகும். இனி, அவர் துணையாசிரியராக இருந்து தொகுத்த சென்னைப் பல்கலைக் கழக வெளியீடான 'ஆங்கிலத் தமிழ் அகராதி' ஒரு செயற்கரிய செயலாகும், இதன் தலைமைத் தொகுப்பாசிரியராகத் திகழ்ந்தவர் மறைந்த அண்ணமலைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் பர்: அ. சிதம்பரநாதனார் என்றாலும், அதன் முழுப் பணியும் நம் பன்மொழிப் புலவர் அவர்களையே சாரும் என்பதை அறிந்தார் அறிவர். இனி, இதன் அடிப்படையில், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக வந்த 'ஆங்கிலத் தமிழ்க் கையகராதி' என்னும் ஏறத்தாழ 700 பக்கச் சில வெளியீடு மிகு பயனுடைய அரிய அறிவு நூலாகும்.

இத்தனை நூல்களை இவர் எழுதி வெளியிட்டிருந்தாலும், இவற்றுலெல்லாம் இவர்க்குக் கிடைத்த அறிவுக் கூலியோ மிக மிக எளிய சிறு சிறு தொகைகளே! இவர் நூல்களை வெளியிட்டுக் கொடுத்த பதிப்பகங்களால் இவர் பெரிதும் ஏமாற்றப்பட்டிருக்-

கிறார். இவர் நூல்களை வெளியிட்டு செய்து கொள்ளையடித்த சில பதிப்பகங்கள் இவர்க்கு அறிவுக் கூலியாகக் கொடுத்தவை 100,200 உருபாக்களும், மிகச் சில வெளியீட்டு நூல்களுமே! இவரின் கழக, ஆங்கிலத் தமிழ்க் கையகராதிக்கு, அப்பதிப்பகத்தார் இவருக்குக் கொடுத்த தொகை வெறும் 300 உருபாவே என்றால், நம் நாட்டு வணிக நூல் வெளியீட்டகங்கள் புலவர்களின் வறுமையைப் பயன்படுத்திக் கொண்டு, புலமையை விலை பேசும் நிலையினை என்னவென்று சொல்வது? இங்கு எப்படி அறிவு வளரும்? அறிஞர்கள் எப்படி வாழமுடியும்? கொள்ளையில் தலையாய கொள்ளை அறிவுக்கொள்ளையே! நம் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களின் தனிநிலை வாழ்க்கை மிக மிக இரங்கத்தக்கது என்பதைத் தெரிவிக்க மிகமிக வருத்தப் படுகிறோம். இவரின் மூளையை உறிஞ்சிக் கொழுத்த வெளியீட்டாளர்கள் இன்றைக்குப் பெருஞ்செல்வம் படைத்த பெரும் முதலாளிகளாய் உள்ள நிலையில், இவர் மறைந்த காலை வீட்டாருக்கு இவர் வைத்துச் சென்றது ஏறத்தாழ ஐந்து இலக்க உருபா கடன் சுமையே என்றால், இவரின் அவல வாழ்க்கையை எண்ணி எவ்வாறு கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியும்?

இவர் உயிரோடிருக்கும் பொழுது இவருக்குக் கிடைத்த பெருமைகள் பல. ஆனால் அவை வெறும் பெருமைகளும் பட்டங்களும் பாராட்டுகளுமே! 1961-இல் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார். தமிழகப் புலவர் குழு உறுப்பினராக இறுதி வரை இருந்துள்ளார். 1970-இல் பாரீசில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் சிறப்புறுப்பினராகக் கலந்து கொண்டார். பின் மதுரையில் நடந்த 5-ஆவது உலகத் தமிழ் மாநாட்டில், தமிழக முதல்வர் முன்னிலையில் இந்தியத் தலைமையமைச்சரால் பொற்கிழியும் கேடயமும் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றார். 1973-இல் செந்தமிழ்ச் செல்வர் பட்டமும், சேலம் தமிழகப் புலவர் குழுக் கூட்டத்தில் சான்றோர் பட்டமும், தமிழன்பர் பட்டமும் பெற்றார். 1981-சனவரி 26-இல் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி பட்டமும் நம் பன்மொழிப் புலவர்க்கு அளிக்கப்பெற்றது. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இவர்க்கு திரு. வி. க. விருதையும் தங்கப் பதக்கத்தையும் கொடுத்துப் பெருமைப்படுத்தியது. அதே ஆண்டு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் இவருக்குப் பேரவைச் செம்மல் என்ற பட்டத்தையும் அளித்தது ஆனால் இவை எல்லாவற்றினும் பெருமைப் படக் கூடிய செய்தி இங்கிலாந்து ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் இவரது ‘தென்னாட்டுப் போர்க்களங்கள்’ என்னும் நூலை, அங்குப் படிக்கும் மேல்பட்டப் படிப்பு மாணவர்களுக்குப் பாடமாக வைத்துள்ளதே!

இத்தனைப் பட்டங்களும் பெருமைகளையும் பெற்றுக் கொண்ட ஒரு பெரும் புலவர் அவற்றை வைத்துத் தமிழ் வணிகம் செய்யத் தெரியாத காரணத்தால், வாழ்வின் இறுதிக் கட்டம் வரை வறுமையிலேயே உழன்றார் என்பதும், இவர் மறைந்த பின்

இவரின் விலைமதிப்பற்ற அறிவுடம்பும், எளிய ஓர் ஏழை மகனுக்கு வாய்க்கும் பூமலர்ப் பாடையில் கூட இன்றிப் புனைவு செய்யப் பெறாத ஒரு வெற்றுத் தென்னங்கிற்றுப் படுக்கையிலேயே கிடத்தி வைக்கப் பெற்றுத் தூக்கிச் சென்று சாவண்டியிலேற்றப் பெற்றதென்பதும் எத்துணைக் கொடுமையான செய்திகள் என்பதை எண்ணிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன். இனி, இதனினும் கொடுமை இவர் பொதுச் சுடுகாட்டில் எல்லா ஏழை எளியவர்களைப் போலவே வெறும் எருவாட்டியால் வைத்துத் தீ மூட்டப்பெற்றது. ஐயகோ! இன்றிருந்து நாளை ஒன்றுமில்லாமற் போகும் அரசியல் தலைவர்களுக்குக்கூட கடற்கரை போலும் சிறப்பிடங்களில் புதைக்கப் பெறும் வாய்ப்பும், ஆரவாரப் புதை மேடைகளும் மணிமண்டபங்களும் கிடைப்பது இயல்பாய் இருக்க, அப்பாத்துரையார், பாவாணர் போலும் பேரறிவுப் பெருமக்கள் பொது இடுகாடுகளிலும் சுடுகாடுகளிலும் புதைக்கப் பெறுவதும், சுடப் பெறுவதும் எத்துணை கொடுமையானவை! இங்கிலாந்தில் அறிஞர்கள், புலவர்கள், பாவலர்களுக்கு Wes Ministe Abbey என்னும் பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய அடக்க விடம் இருப்பது இங்கு சிந்திக்கற் பாலது!

அறிஞர்கள் மறைந்த பிறகு அவர்களை வெகுவாகப் போற்றிப் பேசுவதும், பாராட்டி வானளாவப் புகழ்வதும் நம் தந்நலத்தையும் மன இறுக்கத்தையுமே காட்டும். அறிஞர்கள் தனியாக வாழ்ந்து வளர்ந்து விடுவதில்லை. அனைவரும் குடும்பம் என்ற வயலிலேயே வளர்கின்ற பயிர்களாகவே இருப்பர்; எவ்வளவுக்கெவ்வளவு அறிஞர்கள் தம் தனிநலத்தை மறந்து, பொது நலனுக்காக—மக்களுக்காக—தாம் பிறந்த மொழிக்காக—இனத்துக்காக—நாட்டுக்காகத் தங்களைப் பலியிட்டுக் கொள்கிறார்களோ—ஈகப்படுத்திக் கொள்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் குடும்பங்கள் நசித்துப் போகின்றன என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மையாகும்! இந்த உண்மை நம் பன்மொழிப் புலவர் வாழ்வில் நூற்றுக்கு நூறு மெய்யாகி நிற்கிறது.

அவரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்திற்கு ஏராளமான கடன் சுமைகள் அவர்களின் தோள்களை அழுத்திக் கொண்டிருக்கும் சுமைகளை அரசும் மக்களும் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அவருடைய நூல்களை மறுபதிப்புச் செய்தும் அச்சாகாத நூல்களை வெளிப்படுத்தியும், அவற்றை அரசுடைமையாக்கியும் அவருடைய அளப்பரிய அறிவுக்கு அரண் செய்தல் தமிழரசின் கடமையாகும்! அதன் வழி, தன்னை உண்மையாகத் தமிழ் நலமும் தமிழர் நலமும் கருதும் அரசாக மெய்ப்பித்துக் காட்டுதல் வேண்டும். அல்லாக்கால் எதிர்காலம் இன்றைய அரசையும் மக்களையும் குறைகாணவும் குற்றங்கூறவுமே செய்யும் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்! வாழ்க பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரின் அரும் புகழ்!

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்; (528)

பெருஞ்சித்திரனார் நேருரைகள்!

பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும் - ஓர் ஒப்பாய்வு!

9. இருவருமே பல பாவியங்களைப் படைத்துள்ளீர்கள், இருவரின் பாவியப் படைப்புகள் குறித்தும் ஏதேனும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

பாவேந்தர் பாவியங்களையும், நாடக பாவியங்களையும் மிகுதியாக எழுதியுள்ளார்.

நான் மல்லிகை, கொய்யாக்கனி, ஐயை ஆகிய மூன்று பாவியங்களையும், பதினொரு சிறு பாவியங்களை மட்டுமே (பாவியக் கொத்து) செய்திருக்கின்றேன்.

என்னுடையவற்றில் தூய தமிழ் வழக்கு மிகுதி.

அவருடைய ஆக்கங்களில் சீர்திருத்தம், புது அரசமைப்பு முதலியன உண்டு. தெய்வ நம்பிக்கை அறவே இல்லை. என்னுடையவற்றில் பொதுவான வாழ்வியல், பொதுமைகள், மனவியல் உண்மைகள் முதலியவற்றைப் பார்க்கலாம். ஓரிரண்டு இடங்களில் தெய்வ நம்பிக்கை காட்டப்பெறுகின்றது. என்னுடையவற்றுள் பா அமைப்புகளை மிகுதியாகப் பார்க்கலாம்.

இலக்கிய நயத்திற்காகவே என்னுடைய பாவியங்களில் பல புதிய உத்திகள் கையாளப்பெறுகின்றன; அவருடையவற்றுள் கதை உத்திகள் மிகுதி.

மற்றபடி, இவ்விருபதாம் நூற்றாண்டின் படைப்பிலக்கியங்களில் இருவருடையனவும், தனித்தனித் தன்மைகள் வாய்ந்த புதுமை இலக்கியங்கள், பொதுமை இலக்கியங்கள், தமிழ், தமிழின, தமிழ் நாட்டு நலம் நோக்கியே படைக்கப் பெற்றன; நடைமுறை(யதார்த்த) வாழ்வியலையே அடிப்படையாகக் கொண்டவை.

10. இன்றைய பல்கலைக் கழகங்களின் மொழித்துறை சார்பான முனைவர், மெய். மு. ஆகிய பட்ட ஆய்வுகள் குறித்துத் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இன்றைய பல்கலைக் கழக மேனிலைப் பட்டத்துறை ஆய்வுக் கட்டுரைகளில் மொழித்துறை மறுமலர்ச்சிகளும், இன விழிப்புணர்வுகளும் வாழ்வியல் மேம்பாட்டுப் பொதுமை நோக்கங்களும் மிகுதியாகக் காணப் பெறுகின்றன. அவை ஆக்கமும் பெற்று விளங்குகின்றன.

அடுத்து, முன்பு போலன்றி, இக்கால் நடைமுறை வாழ்வியலையும், அறிவியல் நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டே ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப் பெறும் நூல்கள், ஆய்வுத் தலைப்புகள் கடந்த காலத்தினின்று பெரிதும் வேறுபடுகின்றன. வெறும் இலக்கிய நோக்குகள் மட்டுமன்றி மொழி, இனநல நோக்குகள் இப்-

Scanned with CamScanner

பொழுதைய ஆய்வுகளில் மிகுதியும் காணப் பெறுகின்றன. இவையல்லாமல் சீர்திருத்தப் பார்வைகள், பெண்ணுரிமைகள். பொதுமை நலன்கள், பொதுவுடைமை யுணர்வுகள், உரிமை வேட்கைகள் முதலியவை விரிவாக இடம் பெறுகின்றன.

ஆனால், சிற்சில ஆய்வுகளில் இன்னும் மதவியல், மாந்த அடிமைத் தன்மை, பெண்ணடிமைத்தனம் ஆகியவையும் குடும்பப் பண்பு, குமுகாயப் பண்பு என்னும் அடிப்படையில் ஆண் பெண் உரிமை ஒடுக்கங்களும் காணப்பெறாமல் இல்லை.

மொத்தத்தில் எந்தத்துறை ஆய்வும் படைப்பாளிகளின் தனித்தன்மைகள் (Human personality) படைப்புத் திறன்கள், குமுகாய நோக்கு, பொதுவுலகப் பார்வை, பொதுமைப் பார்வை, அறிவியல் முதிர்ச்சி, மாந்த நலன்கள், மீமிசை மாந்த உணர்வுக்கு மக்களை இட்டுச் செல்லும் குறிக்கோள்—ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வதே பயனுடையதாக இருக்கும் என்பது என் கருத்து.

வெறும் கருத்துக் குவியல்களாகவும், ஆய்வுக் குறிப்புகளாகவுமே ஆய்வுக் கட்டுரைகள் அமைந்துவிடக்கூடாது. எல்லாவற்றினும், மேம்பட்ட ஒரு கொள்கை நோக்கிற்கும் வளர்ச்சிக்கும், புத்துலக அமைப்பிற்கும், படைப்பாசிரியன், எந்த அளவுக்கு அவன் நூல்களின் வழி உதவியிருக்கின்றான்—பாடாற்றியிருக்கின்றான் என்பதை, ஆய்வாளர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நூல்களின் வெறும் புறப்பார்வையால் மட்டுமன்றி, அகப்பார்வையாலும் ஆய்ந்து காணவேண்டும் என்பதும் என்னுடைய கருத்தும் வேண்டுகோளும் ஆகும்.

முடிவாக ஓர் ஆய்வு நூல் வெறும் நூலுருவத்தை மட்டுமே அல்லது வெளிப்பாட்டுக் கருத்து வடிவத்தை மட்டுமே ஆராயாமல், நூலுக்குள் ஊடுருவி நிற்கும் ஆசிரியனின் உள்ள உணர்வுகளையும், உயிர் மலர்ச்சியினையும், அறிவுப் பரிமானங்களையும் ஆழ்ந்த அகப் பார்வையால் ஆராய்ந்து காட்டவேண்டும். ஆய்வு - ஆய்வுக்காக மட்டுமே யன்றி, அல்லது பட்டங்களுக்காக மட்டுமே யன்றிப், புதுமாந்தப் படைப்புக்காகவும் ஓர் உந்துணர்வாக உதவுதல் வேண்டும்.

இனி, இறுதியாக, இன்னொரு கருத்தையும் கூறாமல் இருக்க முடியவில்லை.

பெரும்பாலான ஆய்வுகள் படைப்புகளை மட்டுமே நோக்கியனவாக உள்ளதைப் பார்த்திருக்கின்றேன். அவை படைப்பாசிரியனின் வாழ்க்கையினையும் இணைத்துக் காணத் தக்கனவாகவும் அமைதல் வேண்டும், அத்தகைய ஆய்வே மற்றவர்களுக்கு ஓர் அரிய வாழ்க்கைப் படிப்பினையைத் தரும். இந்தப் பயனை ஆய்வறிஞன் மட்டுமே உருவாக்க முடியும்.

பொதுவாக, படைக்கப்பெறும் நூல்கள் அல்லது இலக்கியங்கள், அவற்றின் நூலாசிரியர்களைவிட உயர்ந்தனவாகவே இருப்-

பாரதியார் தமிழுணர்வு உண்மையா?

1. பாரதியார் தமிழுணர்வு போலியே!

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம், 'பாரதியார் தமிழுணர்வு உண்மையா' என்னும் தலைப்பில் தென்மொழி சுவடி 24 ஓலை 11-இல் வெளியாகியிருந்த கீதா உதயகுமாரின் மடல் கண்டேன்;

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்றும்; "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும், "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்." என்றும்; "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்க வேண்டும்" என்றும், பாரதியார் பாடியிருப்பது உண்மைதான்;

ஆனால், "ஆதிசிவன் பெற்றுவிட்டான்; என்னை ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர் வேதியன் கண்டு மகிழ்ந்தே, நிறைமேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்" என்று தமிழ்த்தாயே கூறுவதாக அவர் பாடியுள்ள பாட்டு அவர் தம் தமிழ் உணர்வு உண்மையானது அன்று என்பதைக் காட்டி விடுகிறதே! தமிழுக்கு இலக்கணம் ஆரிய வேதியனாகிய அகத்தியன் செய்து கொடுத்தான் என்பது அவர் தம் ஆரிய உணர்வை அல்லவா தெளிவாகப் புலப்படுத்துகிறது?

"ஆன்ற மொழிகளினுள் உயர் ஆரியத்திற்கு நிகர் என வாழ்ந்தேன்" என்று தமிழ்த்தாய் சொல்வதாக எழுதுவது ஆரிய உணர்வு தானே! "உலகில் உள்ள மொழிகளில் உயர்ந்தது ஆரிய (சமற்கிருத) மொழிதான்! தமிழ் தோன்றுவதற்கு முன்னமே அது தோன்றியிருந்தது! அந்த ஆரிய மொழிக்கு நிகராகத் தமிழ் வாழ்ந்தது!" என்று தானே அதற்குப் பொருள்; அஃது எப்படித் தமிழ் உணர்வாக முடியும்?

புதுச்சேரிக்குப் பக்கத்து மாவட்டமான தென்னார்க்காடு மாவட்டம் வடலூரில் வாழ்ந்தவர் வள்ளல் பெருமான் இராம-

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பதை நாம் காணலாம். ஆனால் அவற்றைவிட நூலாசிரியர்கள் உயர்ந்தவர்களாக-மேம்பட்டவர்களாக-உள்ளனரா என்பதையும் ஓர் ஆய்வாசிரியன் ஆய்ந்து மக்களுக்குச் சொல்லுதல் வேண்டும். அவ்வாறு நூலைவிட அதன் ஆசிரியன் உயர்ந்து தோன்றவில்லையானால், வேறு யாருக்காக அந்நூலை அவன் படைத்திருக்கிறான் என்பதையும் நாம் நோக்க வேண்டும்.

பல்கலைக் கழகங்கள்தாம் இப்போங்கினை அமைத்துக் கொடுக்கும் ஆய்வுக்களமாக இருக்க முடியும். அப்பொழுதுதான் உலக மறுமலர்ச்சி தோன்றுவதற்கான வாய்ப்பு ஏற்படும். 0

லிங்க அடிகள். பல்லாயிரக்கணக்கான எளிய இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடியவர் அவர். பாரதியார் காலத்துக்கு அண்மைக் காலத்திலேயே வாழ்ந்தவர். தம் உடலைத் தாமே மறைத்துக் கொண்டு மரித்தல் இலாப் பெருவாழ்வு பெற்றவர். அவரைப் பற்றிப் பாரதியார் ஒருவரி கூட எழுதவில்லையே ஏன்? சிவாசி, கோகலே, திலகர், காந்தி, தாதாபாய், மாசினி, நிவேதிதா, ஓவியர் — இரவிவர்மா, மகாமகோபாத்தியாயர், வேல்சு இளவரசர், தாயுமானவர் என்று இப்படிப் பலரையும் பாடிய பாரதியார் இராமலிங்க அடிகளைப் பற்றிப் பாடாமல் விட்டது எதனால்? உண்மைத் தமிழ் உணர்வு இல்லாமையால் தானே!

கிறித்துவம், இசுலாமியம் போல் 'பார்ப்பனியமும்' ஒரு சமயம் என்றும், இசுலாம், கிறித்துவ சமயங்களைத் தழுவிய தமிழர் போல் பார்ப்பனீயத்தைத் தழுவிக் கொண்ட தமிழரே பார்ப்பனர் என்றும் கூறுவது நகைப்புக்கு இடம் தருவதாகவே உள்ளது. இசுலாமிய, கிறித்துவ சமயங்களை அன்று மட்டுமன்று, இன்றுங்கூட யார் வேண்டுமானாலும் தழுவிக் கொள்ளலாம். 'பார்ப்பனிய சமயம்' என்பது அப்படி பட்டதா? அந்தச் சாதியில் பிறக்காத எவரேனும் பார்ப்பனராக முடியுமா? கோயில் குருக்கள் ஆக முடியுமா? பார்ப்பனரும் தமிழர்கள்தாம் என்றால் பெரும்பான்மையாக உள்ள மற்ற தமிழர்கள் யாருமே கோயில் குருக்களாக வரக் கூடாது என்கிறார்களே, அ'து ஏன்?

தமிழகத்தில் இந்தியைப் பரப்புவதற்குத் துணை செய்பவர்கள் பார்ப்பனத் தமிழர்கள்தாமே. 1937-இல் சென்னையில் நடைபெற்ற இந்தி சாகித்திய சம்மேளனம் என்னும் இந்திப் பரப்பு மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் யார் தெரியுமா? தமிழ்த் தாத்தா என்று சொல்லப்படும் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள்தாம்! இன்னும் கூட ஊர்தோறும் இலவய இந்தி வகுப்புகள் நடத்தி வருபவர்களும் பார்ப்பனத் தமிழர்கள்(!) தாமே!

பார்ப்பனர்கள் புறத்தே தமிழர்கள் போல இருக்கிறார்களே தவிர அகத்தே தமிழர்களாக இல்லை என்பதுதான் உண்மை!

திருவள்ளுவர் கூறும் 'இனம் போன்று இனம் அல்லார்' என்ற மொழிக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் பார்ப்பனர்கள்தாம்! அவர்கள் தமிழினத்தவர் போன்றுதாம் இருக்கிறார்கள்; தமிழைத்தான் வீட்டில் பேசுகிறார்கள்; தமிழால்தான் வாழ்கிறார்கள். தமிழரோடு தமிழ் நாட்டில்தான் வாழ்கிறார்கள். ஆனால் எண்ணத்தாலும், செயலாலும் தமிழினத்தவர் அல்லாதவர்களாக விளங்குகிறார்களே என்ன செய்வது? தென்மொழி படிக்கும் கீதா உதயகுமார் போன்றவர்கள்தாம் அவர்களை உண்மைத் தமிழர்களாக மாற்ற முயல வேண்டும்.

—நீலா நக்கீரன்:
காந்திநகர், வேலூர்: 6.

2. பார்ப்பனர் தமிழராகார்!

என் உயிருக்கும் மேலான பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

வணக்கம். தென்மொழி 24-11-இல் பாரதியார் தமிழுணர்வு உண்மையா?'என்ற தலைப்பில் திருவாட்டி.கீதா உதயகுமார் என்பவரின் மடலொன்று வெளியாகி இருந்தது. அதில் பார்ப்பனர் தமிழரே என்றும், இந்தி எதிர்ப்பில் அவர்களைத் தென்மொழி தமிழின்பால் திருப்ப முயலவேண்டும் எனவும் கூறி இருக்கிறார். பர்ப்பனர் 'தமிழர்கள்தாம், நாங்கள்' எனக் கூறிக் கொண்டு, தமிழர்களோடு சேர்ந்தால் அது மகிழ்ச்சிக்குரிய செயலே:ஆயின் அவ்வழிக்குப் பார்ப்பனர் வருவரா? நினைக்கத்தான் இயலுமா? எண்ணிப் பார்க்கவேண்டும்.

பாரதியாரை எடுத்துக்காட்டுக்கு இழுத்து அவர் பாடல்களில் சிலவற்றைச் சுட்டி அவரின் தமிழுணர்வு சிறப்புடையது என்றும் விளக்கியுள்ளார்.

> 'ஆன்ற மொழிகளினுள்ளே உயர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்' எனச் சுட்டியுள்ளார்.

உயர் ஆரியத்திற்கு நிகராகத் தமிழனுக வாழ்ந்தார்; உயர் தமிழுக்கு எனக் குறிக்கவில்லை; உயர் ஆரியச் சமசுகிருதத்தை உயர்த்தியே காட்டியுள்ளார். தமிழால் அவர் உயர்ந்தாரே தவிர அவரால் தமிழ் உயரவில்லை. தமிழ் இலக்கியங்கள் எத்தனையோ இருக்க, ஆரியப் பண்பாட்டை விளக்கும் பாஞ்சாலியின் வரலாற்றைத்தான் சிற்றிலக்கியமாக்கிக் காட்டினார். தமிழைப் புகழ்ந்து பாடிய அவர் 'இமயம் முதல் கன்னிவரை ஆரியநாடு என்று அறி' எனத் தமிழரின் வரலாற்றையே இடுப்பை ஒடித்துக் காட்டினார். ஒரு குடத்துப் பாலில் ஒருதுளி நஞ்சைக் கலந்து பால் முழுவதையும் நஞ்சாக்கிவிட்டார். இங்கு ஆரியருக்கு நாடு உண்டா? வரலாற்றில் சான்றுகள் உண்டா? பார்ப்பனர் நூல் எழுதப் புகுங்கால் தமிழர்களைப்பற்றி ஒரு நூலும் இக்காலப் பார்ப்பனர் எழுதினரில்லை. முனைவர் இராதாக்கிருட்டிணன் அவர்களும், திரு. இராசகோபாலச்சாரியார் அவர்களும் கீதைக்கும், பாரதத்திற்குமே விளத்தங்களை எழுதிவைத்தனர். இவர்களைத் தமிழர் என ஏற்றுக் கொள்ள எச்சான்றுகள் உள? ஒன்றுமில்லை. தமிழகத்தில் இந்தியைப் புகுத்தியவரே இராசாசி அவர்கள்தாம். தாளமுத்து, நடராசனை இந்திப் போராளிகள் என ஏற்றுக் கொள்ள மறுத்த பார்ப்பனவெறியர் தம்முடைய பெயரை இராசாசி என்று எழுதாமல் இராஜாஜி என்றே எழுதவேண்டுமென வற்புறுத்திய சமற்கிருதப் பற்றுளர். அவ்வகை நிகழ்ச்சிகள் வரலாறுகளாக இருக்கும்போது பார்ப்பனரைத் தமிழர்களாகத் திருப்பவேண்டும் என்றால், நாய்வாலை நேராக்க முடியாதே.

கிறித்துவம், முகமதியச் சமயங்களைப் போன்றதே பார்ப்பனியச் சமயம் என அம்மையார் குறிப்பிடுகிறார். ஒரு தமிழன் கிறித்துவனானால் இந்து சமயச் சாதித்தாக்கங்கள் அங்கு இருந்

தாலும் சமயத் தொடர்பான நிகழ்ச்சிகளில் வேற்றுமையின்றிக் கலந்து கொள்ளலாம். ஒரு தமிழன் முகமதியனுனல் முழுக்க முழுக்க அவர்களோடு உறவோடு வாழமுடியும். பார்ப்பனியச் சமயத்தில் அவ்வாறு இருக்கமுடியாதே. பாரதியாரே ஒரு தாழ்த்தப்பட்ட கனகலிங்கம் என்ற ஒருவருக்குப் பூ ணூல் போட்டார். பார்ப்பனியம் அவரைப் பார்ப்பானுக ஏற்றுக் கொண்டதா? இல்லையே, பின் எப்படி அதைக் கிறித்துவம், முகமதியம் போன்றசமய மெனக்கூற இயலும்? இன்னும் தமிழர்களை ஏமாற்றும் நிலை நிற்கவில்லை, தமிழன் ஏமாறியவன்தானே என்ற நினைப்பு.

தமிழர்களுக்கு எதிராக இந்து முன்னணி, விசுவ இந்து பரிசத் பிராமணச் சங்கம், அரே இராமா அரே கிருட்டிணு இயக்கம், சனகல்யாண், சனசாக்ரன், சிவசேனு போன்ற இயக்கங்களைத் தோற்றுவித்துத் தமிழர்களுடைய மொழி, கலை, நாகரிகம் போன்ற அடிப்படை நிலைகளைச் சிதைக்கின்றனர். குமுதம், ஆனந்தவிகடன், துக்ளக், இதயம் பேசுகிறது, ஞானபூமி, தினமலர், தினமணி, சுதேசமித்திரன் போன்ற பார்ப்பன ஏடுகள் வேண்டுமென்றே சமசுகிருதச் சொற்கள், ஆங்கிலச் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் போட்டு எழுதுகின்றன. தமிழைக் கொலை செய்து கொண்டு நாள் தவருமல் தமிழர்களுடைய எல்லா நிலைகளையும் சிதைத்துச் சீரழிக்கின்றனர். பார்ப்பனர் தமிழைத் தாய் மொழியென்று கூறுகிருர்களாம்? ஏன் கூறுகிருர்கள். அவர்களுடைய மொழி அழிந்துவிட்டது. வேறுவழி வேண்டும் அல்லவா? தமிழைத் தாய்மொழியெனக் கூறிக் கொண்டே, தமிழையும் படித்துப் புலமை பெற்று அதனுல் வயிற்றை வளர்க்கும் பார்ப்பனப் புலவர் கீரன் என்பார், தமிழ் வழிபாட்டு மொழியாவதற்குத் தகுதியற்றது என வெளிப்படக் கூறித் திரிகிருரே அவர் போன்ற பார்ப்பனர் தமிழர் என்று தம்மை அழைக்க ஒப்பார்.

1972இல் தமிழ் நிலத்திற்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் தமிழ், தமிழன் கட்டியக் கோவிலில் வழிபாட்டு மொழியாக பயன்படுத்த வேண்டுமென அனுப்பிய சுற்றறிக்கையைப் பார்ப்பனர் எதிர்த்து வழக்குமன்றஞ் சென்று தோற்கடித்தனர்; மீண்டும் அவ்வழக்கு தலைமை அறமன்றம் (Supreme court) சென்று முடக்கப்பட்டுவிட்டது; பாவலரேறு அவர்கள் அதற்கு உயிர் கொடுத்தும் இன்னும் உசாவல் இல்லை. இப்பார்ப்பனர் எப்படித் தமிழர் எனக் கூறிக் கொள்ளமுடியும்? தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் பார்ப்பனத்தி என்ற திமிரில் செங்கோட்டையன் என்ற தமிழனையும் முதலமைச்சரையும் வாடா, போடா, அவன், இவன் என்று மதிப்பு இல்லாமல் பேசி இருக்கிருர்; தமிழனும் மானமிழந்து வாழ்கிருன்; அதனுல் தமிழர்களை அடிமையாக்க பற்பல இயக்கங்களை நடத்தி வருகின்றனர்; அவற்றுக்குத் தலைமையும் பார்ப்பனரே; அவற்றின் பெயர்களும் சமற்கிருதச் சொற்கள்; ஓம் என்று தமிழில் எழுதாமல் சமற்கிருதத்தில் எழுதிக் கொண்டார்கள். ஒரு நாளும்

Scanned with CamScanner

எழுத்துச் சீர்திருத்தம் ஒரு நடுநிலைக் கருத்தாய்வு!

முனைவர்: வ. சுப. மாணிக்கம்.
(முன்னைத் துணைவேந்தர், மதுரை, காமராசர் பல்கலைக்கழகம்)

எழுத்துச் சிதைப்பினை அறவே விட்டு விட்டுக், கருவிச் சீரமைப்பினை விரைந்து கண்டு அறிமுகப்படுத்துவதே பொறுப்பும் கடமையுமாகும். 1978இல் 13 எழுத்துத் திருத்தங்கள் அரசாணையால் ஏற்பட்டன. இதனால் என்ன வளர்ச்சி தமிழுக்கு வந்துவிட்டது? நாங்கள் சொல்லும் எல்லாத்திருத்தங்களும் அரசாணையாகி நடைமுறைக்கு வந்த பின்புதான், அறிவியல் ஊழியில் முழுத் தமிழ் வளர்ச்சி காணவியலும் என்று திருத்தம் வேண்டிகள் காரணம் சொன்னாலும் சொல்லலாம்.

வளர்ச்சிச் சூத்திரம் :

"வளர்ச்சி என்பது மாற்றம்: மாற்றம் வளர்ச்சியின் ஒரு பகுதி: மாற்றமில்லையேல் வளர்ச்சியில்லை; மாறாத ஒன்று வளராது" என்று வா, செ.கு. சொல்லும் பொது நெறி பேருண்மையாகும். இவ்வுண்மையைப் பகுத்துணர்ந்து ஆளவேண்டும் என்பது அதனைவிடப் பெரும் பேருண்மையாகும்: எதற்கு மாற்றம்? எவ்வளவு மாற்றம்? மாற்றத்தின் பயனளவு என்ன? இயல்பான மாறுதலா? வலிந்த மாற்றமா? அகம் எழுந்த மாற்றமா? புறம் திணித்த மாற்றமா? இது நிற்குமா? தொடருமா? இந்த அளவுப் பயனுக்கு இம்மாற்றம் வேண்டுமா? என்றெல்லாம் பார்த்துத்தான் மாற்றம் வளர்ச்சி தருவது பற்றித் துணியவேண்டும். எல்லா மாற்றமும் வளர்ச்சியாகாது; கேடானவும் பலவுள:

தமிழ் ஒலிகளை மாற்றவில்லை எனவும் வரி வடிவைத்தான்—அச்சுக் குழிகளைத்தான் குறைக்கின்றோம் எனவும் சொல்லுகின்றவர்களே இது சிறு மாற்றந்தான் எனவும் கட்டம் கட்டமாக முழு மாற்றம் இன்னும் பல உண்டு எனவும் மேலும் அடிப் போடுவதைக் கேட்கின்றோம். இப்போது இகர ஈகார உகர ஊகாரங்களின்-72 வடிவுகளை 4 ஆகக் குறைக்க வேண்டுமென்று முயலும் எழுத்துத் திருத்திகளுக்கு 68 எழுத்து மாற்றம் குறைந்த அளவாகப்படுகின்றது. ஒவ்வொருவரும் அவ்வளவு குறைப்பேன், இவ்வளவு குறைப்பேன் என்று போட்டி போட்டுக் கொண்டு புதிய குறியீடுகளை வேண்டியவாறு படைத்துக் கொண்டு இகலிடுவதைப் பார்த்தால், ஒவ்வொருவரும் மாற்றமின்றேல் வளர்ச்சியின்று என்ற சூத்திரத்தைச் சொல்லுவதை எண்ணினால், தமிழின்

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழன் பார்ப்பனனாகான்: பார்ப்பான் தமிழனாகான்: முடியாத செயலுக்காக முட்டிக் கொள்ளவேண்டாம்! அன்புள்ள,

—அதியமான், தாழையூற்று:

வழக்கு வரிவடிவை முழுதும் ஒழித்துக்கட்டி, தமிழையே உரோமன் தமிழாக மாற்றும் வரை இன்னோர் தம் அறிவியல் ஊழிப்போர் நீங்காது என்று எண்ணுகிறேன்.

ஒரு புறம் தமிழ் வடிவைக் குறைக்கவேண்டும் என்று வழக்காடும்போது, வடமொழி யெழுத்து வடிவங்களை நிலையாகத் தமிழ் நெடுங்கணக்கிற் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், ஆங்கிலத்தின் ஆறுவது எழுத்தினைத் தமிழ் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும், உலகப் பல்லினத்தின் மக்கள் பெயர்களையும் ஊர்ப் பெயர்களையும் அவ்வொலிப்புப்படியே ஒலிப்பதற்குத் தேவையான வேற்றொலிகளைத் தமிழ் போற்றிக் கொள்ளவேண்டும் எனவும். வன்முறை செய்யும் கூட்டத்தாரையும் நாம் மறப்பதற்கில்லை, இப்போது கூறப்படுவது குறைந்த அளவு மாற்றமே என்று வெளிப்பட ஒத்துக் கொள்ளும் துணைவேந்தர் வா.செ.கு., கட்டம் கட்டமாகப் பத்தாண்டுகளுக்கு ஒரு முறையோ, கருவிகளின் மாற்றத்திற்கு ஏற்பவோ தமிழ் வரிவடிவங்களைத் திருத்துவதை எதிர்கால நோக்காகக் கொண்டுள்ளார் என்பது தெளிவாகும். தமிழுக்கு உரிய தனி எழுத்து வடிவங்களைக் கருவிக்கு ஒவ்வாமை கூறி அடிக்கடி சிதைத்து அழிப்பதும், தமிழினை உரோமன் தமிழாக்குவதும், அதனால் உலக மொழியாகக் காண்பதும் இன்னோர் தம் முடிவான கேடான அழிவான மருட்கோளாகும்;

தமிழ் வரிவடிவ வரலாறு:

"எல்லா நூற்றாண்டுகளிலும் தமிழ் வரிவடிவங்கள் மாறிக் கொண்டே வந்திருக்கின்றன. ஆதலின் இப்போது மாற்றம் செய்வது வரலாற்றுக்குப் பொருந்தும்?' என்று வடிவுத் திருத்தம் வேண்டிகள் நல்ல சான்றாகக் கூறுவதையும் காலந்தோறும் வந்த வரி வடிவ மாற்றங்களைப் படம் இட்டுக் காட்டுவதையும் அறிவோம். எழுது கருவிக்கு ஏற்பவும் எழுதப் பெற்ற பொருளுக்கு ஏற்பவும் வரி வடிவுகள் மாறி வந்துள என்பது இன்னோர் தம் கருத்துப்பாடு. இ'து அடிப்படை யுண்மையன்று. எழுத்தாணியால் எழுதினாலும் அக்கருவிகளை எல்லாம் இயக்கும் கருவியாக அன்று இருந்த மூலக் கருவி கையாகும். அவையெல்லாம் கையெழுத்து என்றே சொல்லவேண்டும். இன்றுகூட எக்கருவியால் தாளில் எழுதினாலும் ஒவ்வொருவர் தம் கையெழுத்தும் முப்பது எழுத்துக்கும் வேறுபடுவதைக் காண்கின்றோம். உரோமன் எழுத்திற்கும் பிறவகையெழுத்திற்குங்கூட இந்த வேறுபாடு பொருந்தும். எழுநூறு கோடி உலக மக்கள் தொகையில் ஒவ்வொருவர் முகமும் தனித் தன்மைக்கூறு உடையதுபோல, எம்மொழியில் எழுதினும் கையெழுத்து வேறுபடுவதாலன்றோ அவ்வெழுத்தைச் சான்றாகக் கொள்கின்றோம். ஆதலின் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் அச்சுப்பொறி வருவதற்கு முன் இருந்த மாற்றங்கட்குக் கருவியடிப்படையன்று; எழுதுங்கையே அடிப்படையாகும்;

அச்சுப்பொறி வந்தபின், அக் கையெழுத்து வடிவம் அச்சுப் பதிவாயிற்று. ஆதலின் ஏறக்குறைய 300 ஆண்டுகளாக வரிவடி-வில் பெருமாற்றம் இல்லை என்பதனை வடிவுப் படமே காட்டும். எனவே வரிவடிவில் ஒரு நிலைபேற்றை 300 ஆண்டுகளாகக் காண்-கின்றோம். மேலும் அச்சு வடிவையே குழந்தைகளின் எழுத்துப் பயிற்சிக்கு மாதிரியாகக் கொள்வதால் நிலைபேறு தொடர்ந்து வருகின்றது. குண்டு குண்டாக அச்சாக எழுதுகிறான் என்ற வழக்குத்தொடர் பிறந்தது. தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளி-யிட்ட திருக்குறள் திரு. தெ. நெடுஞ்செழியன் என்பவர் கையால் வரைந்த அச்சு வடிவாகும். அச்சு வந்தபின் ஏனைய மொழி களின் வரிவடிவும் குறிப்பிடத்தக்க நிலைபேறு எய்தியது போலவே தமிழ் வடிவும் சீர்மை பெற்றது. கையெழுத்தே முழுக் கருவி-யாக இருந்த காலத்து ஏற்பட்ட இயல்பான கூர்தல் மாற்றங்களை அச்சுத் தோற்றத்துக்குப் பின்னும் சான்றாகக் காட்டுவது மருளாகும்.

வீரமாமுனிவர் 18-ஆவது நூற்றாண்டில் இரு நெடில்களை ஏ, ஓ என மாற்றஞ்செய்ததைத் திருத்தம் வேண்டிகள் சான்று காட்டுவதும் ஒரு மருளாகும். அவர் செய்த மாற்றம் இன்னோர் கூறுவது போல அச்சுச் சீர்மைப்பட்டதன்று? முற்றும் தெளிவு நோக்கியது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஒரு மொழிக்கண் வடிவாயினும், நடையாயினும், இலக்கணமாயினும் தெளிவுகருதி மாற்றங்கள் செய்யலாம்; செய்ய வேண்டும்; செய்யப்பட்டுள. அரைப்புள்ளி, காற்புள்ளி கூட மரபியலுக்கு மாறானவை எனப் புலவர்கள் கூறுவதுபோல ஒரன்பர் பகடி(கேலி) செய்கிறார். இப் பகடி தமிழுக்கு வேலியாகும். தெளிவு தருவ-தால் இப்புள்ளிகள் மரபோடு மரபாகின. சில ஆண்டுகளாக 7 என்பதனை நடுக்கோடிட்ட வடிவிலும், 04—09—1989 என நாள்-களைக் குறிப்பிடும்போது முன் சுழியிட்டும் எழுதும் திருத்தமெல்-லாம் தெளிவுக்காம்; திருட்டுத் திருத்தத்தைத் தவிர்ப்பதற்கும் ஆம். உ௱௧௨ (212) எனத் தமிழெண்கள் ஒருகால் எழுதப்பட்-டதை அண்மைக்காலமாக உகஉ என எழுதுகிறோம். இட நிலையை ஒத்துக்கொண்டதால் வந்த சுருக்கமும் தெளிவுமாம். 1935 இல் பாரதியார்க்கும், வ.உ.சிக்கும் தோன்றிய தமிழ் எழுத் துப் பூசல் ஒலி பற்றியதேயன்றி அச்சு நோக்கிய வடிவுச் சீர்மை-யன்று.

இவ்விளக்கங்களால் நாம் அறியத் தகுவது என்ன? அச்சுப் பொறிக்குப் பின் தமிழ்வடிவம் நிலையான தொடர்ச்சியான சீர்மைபெற்று விளங்குகின்றது. அச்சீரமைப்புப்படி இலக்கக்-கணக்கான நூல்கள் கையெழுத்திலான ஏட்டுப் படிகளிலிருந்து பதிப்புச் செய்யப் பெற்றன. முந்நூறாண்டுகளாக இத்தமிழ் வரி வடிவே உலகம் அறிந்த வடிவுகளாகும். இவ்வடிவமைப்பில்தான் கருவிகளும் பயிற்சிகளும் நிகழ்ந்து குறிப்பிடத்தக்க மரபு ஏற்பட்-டுள்ளது. இவையெல்லாம் முந்நூறாண்டின் தமிழ் வளர்ச்சிகள். நாமக்கல் பாவலர் தெளிவான காரணம் காட்டியது போல, 2000

Scanned with CamScanner

ஆண்டுகளாக அறிவியல் வளர்ந்து வந்த காலத்துமுதல் ஆங்கிலம் இந்நாட்டில் கல்வித் தளத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்ட-தால், தமிழுக்கு நுழைவாயில் 200 ஆண்டுகளாக அடைக்கப்-பட்டதால், தமிழ் அறிவியல் ஊழியின் வளர்ச்சியைத் தொட்டுப் பார்க்க இயலவில்லை. இதுவே எதிர்கால நம் சிந்தனையாகும். தமிழுக்குப் பள்ளியடைப்பே கொள்ளிக்கட்டையாயிற்று.

விளையாட்டுச் சிந்தனையா?

இரண்டு இணைகோட்டிற்குள் அடங்குவது, பக்கவாட்டமாக அமைவது, அச்சுக் குழிகளைக் குறைத்து 27 அல்லது 31 ஆக்குவது, இன்று உள்ள கருவிகளின் அமைப்புக்கு ஏற்குமாறு வரிவடிவுகளைச் சரிசெய்வது என்பனவெல்லாம் சீர்மைகள் என்பர். இச்சீர்மை-யினால் குழந்தைகள் 100 வரிவடிவங்களை மனப்பாடஞ் செய்வது குறையும்; மொழிச்சுமை குறையும் எனக் குழந்தை நலம் காட்டு-வர். தமிழ் வரிவடிவை 31 ஆகவோ இன்னும் குறைவாகவோ செய்துவிட்டால், இராமநாதபுர மாவட்டத்தில் பாலாறும் தேனாறும் ஓடுவதுபோல, தமிழுக்கும் தமிழினத்துக்கும் கற்பனை செய்து பார்க்க முடியாத நலப் பேறுகள் கொழிக்கும் என்பது இன்னவர்தம் விளம்பரம். இந்த எழுத்துத் திருத்தங்களை ஒரு முறை அறிமுகப்படுத்திவிட்டால் எல்லாரும் எளிதாகப் புரிந்து கொள்வர் எனவும், இதுவரை முறையெழுத்தில் அச்சிட்ட பல்லாயிரம் தமிழ் நூல்களையும் நிமிடத்துக்கு 6000 பக்கவளவில் இந்த அறிவியல் ஊழியில் சீர்திருத்த எழுத்தில் அச்சிட்டுவிடலாம் எனவும், இவையெல்லாம் சிக்கல்களேயல்ல எனவும் இன்னோர் தரும் கூற்று வழக்காடுதற்குரிய தகுதியன்று.

ஒரு நூல் கூட வெளியிடுவதற்கு உடன் பொருள் கிடைக்காத நிலையில், தனி நிறுவனங்களே அல்லற்பட்டு ஏனோதானோ என்று வெளியீடுகள் செய்யும் நிலையில், தகுதிவாய்ந்த பல்லாயிர, நூல்-கள் மறுபதிப்பாகாமல் உ. வே. சா. போன்றோர் மீண்டும் பிறப்-பார்களா என்று தவங்கிடக்கும் நிலையில், நாம் கற்பனை வழக்கு-களுக்கும் பலியாக முடியுமா? 6 கோடித் தமிழ் மக்களுள் இன்று 3 கோடியினர் ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். எழுத்-துத் திருத்தத்தால் இவரெல்லாரும் முதற் குருடாவர். அகவை வந்தோர் கல்வித்திட்டம் போல இவர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்க எழுத்துத்திருத்தத் திட்டம் வகுக்கவேண்டுமா? மேலும் இன்று திருத்தவெழுத்திற் கற்கும் குழந்தைகள் இதுகாறும் வெளி வந்த பல்லாயிரக்கணக்கான முன்னூல்களைப் பயில, அவர்-களுக்கு முறையெழுத்துப் பயிற்சி கொடுக்கவேண்டுமா? படித்-தோரும் குருடாவர்; படிப்போரும் குருடாவர் என்ற நிலையில் இன்று வரை வளர்ந்த தமிழும் என்னாகும்? எங்கே போய் முடியும்? தமிழும் குருடாகும்; வழக்கறும். சொல்லுவது மிக மிக எளிது என்ற குறள்தான் நமக்கு நினைவு வருகின்றது. இத்திருத்தத்தால் பயனளவு என்ன? இழப்பளவு என்ன?

முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்

Scanned with CamScanner

என்ற வள்ளுவம் எழுத்துமாற்றம் வேண்டுவோரின் மறு சிந்தனைக்கு உரியதாகும். மொழித்திருத்தம்—எழுத்துத்திருத்தம் என்பது பொம்மை விளையாட்டன்று. அழிவு வினையாட்டாகி விடும்.

சீர்மை என்றால் என்ன?

மரபியல் அணுகுமுறையே மொழியின் சீர்மை எனப்படும். ஒலியையோ சொல்லையோ தொடரின் நடையையோ குழந்தை மூன்றாண்டிற்குள் வேண்டியவளவு பேசுகின்றதால், இயல்பான செவிவழக்கே சீர்மையாகும். கல்லாதாரின் மொழிப் பேச்செல்லாம் இயல்பு வழக்கில் முழுத்தொடர்களாக, முழுச்சொற்களாகக் கேட்கின்றோம்; பார்க்கின்றோம், பழகுகின்றோமேயன்றி, ஆடையாகப் பார்க்கின்றோமேயன்றி, ஒவ்வோர் எழுத்தாகவோ, இழை இழையாகவோ கண்ணெடுக்கிப் பார்ப்பதில்லை. நடைப்பழக்கத்தில் ஓடுகின்றோம், தாவுகின்றோம், பறக்கின்றோமேயன்றி அடியடியாக எண்ணுவதில்லை. சோற்றைக் கவளங்கவளமாக உண்ணுகின்றோமேயன்றிப் பருக்கைகளை எண்ணுவதில்லை. இவையெல்லாம் இயல்பான வழக்கியல் மரபுகள். மரபியல் மரபினை அறியாமல் ஹ, ஹு, கெ, கே. கொ, கோ, கௌ, கு, பு, சு. து, டீ, யூ எனப் பல சீர்மையற்ற வடிவங்கள் குழந்தைகளுக்குப் பெருஞ்சுமை எனவும் மனப்பாடஞ்செய்ய வேண்டியவை எனவும் மனப்பாடம், சுமை என்ற கனச் சொற்களை ஈண்டுப் பயன்படுத்தல் வலிந்து கோடலாகும்.

ஆங்கிலத்தின் சீர்மை?

ஆங்கிலத்தின் 26 எழுத்துகள் வரிவடிவில் பெரிதும் சிறிதுமாக 104 ஆகின்றன. மழலைப்பள்ளி ஆங்கில அரிச்சுவடியில் அச்செழுத்துப் பெரியது, அச்செழுத்துச் சிறியது, கையெழுத்துப் பெரியது, கையெழுத்துச் சிறியது என இந்த 104 வடிவங்கள் உள. ஆங்கிலப் பேராசிரியர் அய்யாதுரையின் கணக்குப்படி 524 வகைகள் உள. 26 எழுத்துகளில் உயிர் ஒரு வரிசையாக எண்ணப்படவில்லை; மெய்கள் ஒரு வரிசையாக எண்ணப்படவில்லை. மெய்களுள்ளும் வல்லினம், மெல்லினம், இதழினம், உயிர்ப்பினம், உயிர்ப்பிலாத இனங்கள் அடுத்தடுத்து இணையாகக் கிடக்கவில்லை. மேலோடிய எழுத்துகளும் கீழிறங்கிய எழுத்துகளும் ஒருகோடு அடங்கும் எழுத்துகளும் உள. பலர் உடன்பட்டபடி c, q, x எனத் தேவையற்ற ஒலிகளும் உள. ஆங்கில மரபில் வாய் வழக்கில் மக்கள் பெயர்களையும், ஊர்களையும், மலைப் பெயர்களையும் சொல்லும்போது தலையெழுத்து என்ற பேச்சுக்கு இடமில்லை. ஆனால் அவை எழுத்துவழக்குப் பெறும்போது தலையெழுத்துகளைப் (Capital letters) பெறுகின்றன. மேலும் தெய்வங்களைச் சுட்டும்போது, தொடர் நடையில் His, Her என்று தலையெழுத்துகளை ஆளுகின்றோம். நான் என்ற பொருளுடைய I பேசும்போது பெரியவெழுத்தாவதில்லை. எழுதும்போது முதலிடை கடையெங்கும் தலையெழுத்தினையே பெறுகின்றது.

எனவே வாய்வழக்கு ஒன்றாகவும் வரிவடிவ வழக்கு மற்றொன்றாக-வும் இருக்கின்றது. இவை குழந்தைகளுக்குப் பெரிய மனப்பாடம் இல்லையா? பெருஞ்சுமையில்லையா? குதிரைப் பார்வை கூடாது.

நம்மனோர் ஆங்கிலத்தைத் தாய்மொழியினும் மேலாகக் கருதுவதால், தாய்த் தமிழைத் திருத்துவதற்கு ஆங்கிலத்தை மாசற்ற அளவு கோலாக வைத்துக் கொள்வதால், மேலே சில சீர்மையின்மைகளைக் குறிப்பிட்டேன். இன்று ஆங்கிலத்தில் அரைக்கோடிச் சொற்கள் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய எழுத்துகள் என்ன? அங்ஙனம் எழுதிய பின் அவற்றை ஒலிப்பது எப்படி? என்று ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வாத எழுத்துச் சீர்மையையும் ஒவ்வாத ஒலிப்புச் சீர்மையை-யும் தெரிந்தாக வேண்டும். ஆங்கில அகராதிகளின் ஒருவகைப் பருமனுக்கும் பளுவுக்கும் இந்த இருநிலைகள் காரணமாகும் என்-பதனை உலகம் அறியும். எழுத்துக்கூட்டே சொல்லாக விளங்கும். தமிழைக் கற்ற குழந்தைகள் cat, rat என்பதனைத் தமிழ்போல் சிஏடி என்றும், ஆர்ஏடி என்றும்தானே சொல்லவேண்டும் என்று கேட்டால், நாம் என்ன சொல்கின்றோம். அஃது அம்மொழியின் மரபு என்பதனைத் தவிர வேறு சீர்மை சொல்லமுடியுமா? இங்-ஙனம் பல்லாயிரக்கணக்கான ஆங்கிலச் சொற்களை எழுதும் போதும் ஒலிக்கும்போதும் குழந்தைகளுக்கு மனப்பாடம் சுமை என்று சொல்ல முன் வருகின்றோமா? ஆங்கில இலக்கணத்திலுந்-தான், தமிழ் எழுத்துத் திருத்திகள் சொல்லுகின்ற நேர்கோடு இட்டாற் போன்ற சீர்மைகள் உண்டா? வேற்றுமையுருபுகள் முன் நிற்கின்றன; பன்மைப் பொருளும் இறந்தகாலப் பொருளும் எச்சப்பொருளும் எவ்வளவோ வேற்றுமையான வடிவங்களும் பெறுகின்றன; வடிவின்மையும் பெறுகின்றன. Present, past, past participle என்ற முந்நிலைகள் பெரும் பயிற்சிக்குரியவை. இவை யெல்லாம் சீர்மையல்ல என்பது என் கருத்தன்று. இவற்றை நம்மனோர் தமிழுக்குச் சொல்லுமாறு, ஆங்கிலத்திருத்தம் செய்-யப் புறப்பட்டால் யார் ஏற்றுக் கொள்வர்? நாமே ஏற்றுக் கொள்ள மாட்டோமே.

தமிழகத்தில் உள்ள ஆங்கில இதழ்களாவது தமிழுக்கே உரிய ஒலிகொண்ட தமிழ்க்குடிமகன், அழகப்பன், பாண்டியன், அண்ணாமலை, திருவள்ளுவர், திருக்குறள் என்ற பெயர்களைப் பதிப்பிக்கும்போது 26 எழுத்துகளினின்றும் புறம்போய், ழ, ற, ண என்ற எழுத்துகளைச் சேர்த்துக் கொள்வதுண்டா? சேர்த்துக் கொள்ளாமையே தகும் என்பது என் கருத்து. இதுவே மொழி மரபியல் அணுகுமுறை. ''மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்'' என்று 5000 ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியம் எச்சரிக்கின்-றது. எழுத்துத்திருத்திகள் தமிழெழுத்து வடிவங்களைக் குழந்தை-கள் மனப்பாடஞ் செய்வது குறையும், சுமை குறையும் என்று குழந்தைகட்குத் தமிழினின்றும் பெரிய விடுதலை செய்வதுபோல இடந்தோறும் வலியுறுத்துவதால், ஆங்கிலத்தின் அமைப்பு என்ன, சீர்மை என்ன என்று எதிர்குதிராகக் காட்டவேண்டிய

Scanned with CamScanner

நிலை எனக்கு ஏற்பட்டது? மரபியல் அணுகுமுறைதான் மொழியின் அணுகுமுறை என்ற உலகமொழி நெறியை நாம் கடைப்பிடிக்கவேண்டும். எம்மொழிக்கும் வேறு அணுகுமுறை அழிவு முறையாகிவிடும்.

மரபியல் அணுகுமுறை:

வரிசையோ முன்னே பின்னே மேலோ கீழோ பக்கவாட்டிலோ பல்வேறு நிலைகளோ மொழியின் சீர்மையைக் குறைக்காது. நான் முன்னே சொல்லியபடி நம் செவியும் கண்ணும் மொழியின் கூறுகளை ஒற்றையாகக் கேட்பதோ பார்ப்பதோ இல்லை; அகன்ற பார்வையே மொழிப்பார்வை. கொ. கோ. கௌ என்பவை மூன்றெழுத்தென்றோ, உயிர்க் குறியீடுகள் முன்பின் என்றோ கருதுவதேயில்லை. இலத்தீன் எண்களை நாம் அறிவோம். IV (4), IX (9), XL (40), XC (90), CD (400), MCMXLIX(1949) என வருகின்றன. குறைத்தலும் கூட்டலும் பன்னிலைப்படுகின்றன. மேலும் உரோமன் எழுத்துகளே எண்ணுக்கும் பயன்படுகின்றன. இதுபோல் தமிழெண்களும் எழுத்தோடு தொடர்புடையவையாகும். தேவநாகரி எழுத்தில் இகரக் குறியீடு முன்னிற்பதையும் உகர ஊகாரங்கள் கீழ் வளைவதையும் 37, 38 ஆவது மெய்கள் கீழ்ப்புள்ளி பெறுவதையும் காண்கின்றோம். அரபி, உருது, சீன மொழிகளின் வடிவங்களை நாம் மரபியல் முறையில் சீர்மைகள் என உடன்படவேண்டும். ஒரு மொழிக்கு எழுத்தாயினும் வடிவாயினும் சொல்லாயினும் இலக்கண முடிபாயினும் மரபியல் அணுகுமுறையே சீர்முறையாகும். அத்தகைய அணுகுமுறைக்குள் பழையன கழிதலும் புதியன புகுதலும் உண்டு. அவை மரபு வழிப்பட்ட, மாற்றம் என்றே தோன்றாத, வழக்கிடை வளர்ந்து பரவிக் கலந்த இயல்பு மாறுதலாகும். கையெழுத்துக் காலத்துத் தோன்றிய வடிவ மாற்றங்களோ வீரமாமுனிவர் செய்த ஏ ஓ மாற்றங்களோ அரசாணைப்பட்ட அதிகார மாற்றங்கள் அல்ல; இம்மாற்றங்கள் தெளிவிற் பிறந்த வழக்கதிகாரமே. மக்கள் வழக்கே மூலமாகும். இத்தெளிவு கருதித்தான் 'ை' என்ற ஐகாரக்குறியீடு ணை, னை, லை, ளை என மேலே துதிக்கைபோல வளைக்கப்பட்டது. ணை, னை, என வரும் சுழி மிகுகையால் தடுமாற்றம் ஏற்படும் என்ற தெளிவே இதற்குக் காரணம். 1 2 3 4 5 6 7 என நீண்ட தொடரெண்களை எழுதும்போது இடையிடையே காற்புள்ளியிடுவதை ஒப்பு நோக்குக.

எழுத்துத் திருத்திகள் கையெழுத்துக்கும் வடிவங்கள் எளிதாக இருக்க வேண்டும் என்பதனை உடன்படுகின்றனர். இது நல்ல குறிக்கோள். ஆனால் ஒன்றினை மனங்கொள்ள வேண்டும். மெய் வடிவங்கள் எல்லாம் ஒரே சீர்மையான வடிவுடையன அல்ல. 18 மெய்யெழுத்துகள் நான்கு அல்லது 5 வகையான வடிவமைப்புடையவை. அவற்றுக்குத் தக்கபடி தான் உயிர்க்குறியீடுகளை வரலாற்று வழிக் காண்கின்றோம். மெய்யெழுத்துகள் இறுதியில் ஒருகோடாக இருக்கும்போதும், ஒரு கோடாக இடங்

கொடுக்கும்போதும், ஙு, சு, து, நு, பு, யு, லு, வு, று, னு என்ற-வாறு இணைவு செய்தனர், இவ்வகையாக ஏனை இணைவுகளையும் நோக்க வேண்டும். கையெழுத்து எளிமை நோக்கமாதலின், நல்ல சீர்மைகள் முன்பே அச்சு வடிவில் அமைந்து விட்டன.

பயனில்லா எழுத்துத் திருத்தம்:

இறுதியாக, எழுத்துச் சீர்மைத்திருத்தங்களால் ஏதாவது பயனுண்டா? என்று பார்ப்போம். துணைவேந்தர் வா. செ. கு. அவர்கள் கணிப்பான் அமைப்பில் எழுதப்பட்ட ஒரு பத்தியைத் தினமணியில் (14-2-89) வெளியிட்டிருக்கின்றனர். அது வருமாறு:

> "நாம் வாழும் சூழ்நிலையின் தூய்மை பற்றி நாம் நீண்ட காலப் பார்வையோடும், கூடியவரை இயற்கையின் கூறுபாடுகளைப் பாதிக்காத முறையிலும், இருப்பதைப் பூமிப் பகுதியிலும் வானவெளியிலும் முழு மூச்சான முயற்சியுடன் பாதுகாக்கும் கூர்மையுடனும் செயல்படவேண்டும்."

இப்பத்தியில் கணிப்பான் முறைப்படி சீர்திருத்த எழுத்துப்படி 183 எழுத்துகள் வருகின்றன. நாம் சொல்லும் முறை எழுத்தின்படி பொருள் குறைபாடின்றி இவை 139 எழுத்துக்களில் அமைகின்றன. எனவே புதிய சீரமைப்பு கணிப்பானுக்காக 44 எழுத்துகள் அஃதாவது 4-இல் 1 கூடுகின்றது. இத்திருத்தத்தால் 4 வரிக்கு ஒரு வரியும், 40 பக்கத்துக்கு 10 பக்கமும், 4000 பக்கத்துக்கு 1000 பக்கமும் கணிப்பானுற் கூடும், நீ, நிதி, நீதி, திரு, குழு, புளி, குடி, மூடி, பீடி, வீடு, கூறு, துணி, தூது, கிளி, துடுப்பு, சிரிப்பு, விரிப்பு, சுருட்டு, முருகு, விரிவு, புதுசு, துணிபு என்ற ஆயிரக்கணக்கான வழக்குச் சொற்கள் திருத்தெழுத்தில் கணிப்பானில் எல்லா வகையாலும் இரு மடங்கு நீளமாகும்; இரட்டிப்புச் செலவாகும். தட்டு தாம்பாளமாகும்; கணிப்பான் விரிப்பான் ஆகும். இவ்வாறே தமிழ் நூல் முழுவதையும் கணக்கிடுங்கள். இக்கணக்கிலே, தாள் கூடும், மை கூடும், கூலி கூடும், விலை கூடும், தொடர்புடைய எல்லாம் கூடும்; காலமும் கூட ஓரளவு கூடுமேயன்றிக் குறையாது.

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தேர்வெல்லாம் கையெழுத்தால் எழுதுவர். முறையெழுத்தால் 2 மணியளவில் எழுதி முடிப்பதற்கு இனி மணி இரண்டரையாகும். இருபது தாள் 25 தாள் ஆகும். உண்மையாகச் சொன்னால் 5 வினாக்களின் விடையெழுதுவதற்கு இப்போது கொடுக்கும் 3 மணியளவு 3.30 ஆகிக் கூட்டவேண்டும். அல்லது 4 வினாக்கள் எழுதினாற்போதும் எனக் குறைக்க வேண்டும். கல்வித்துறை, பதிப்புத்துறை, வெளியீட்டுத்துறை, இதழ்த்துறை, வணிகத்துறை, ஆட்சியலுவல் துறை, மக்கள் தொடர்பு, மொழித் தொடர்புடைய அனைத்துத் துறையும் நான்கில் ஒருமடங்கு பொருளியலாலும், காலத்தாலும், உழைப்பாலும் வீணே கூடுதலாகும் என்பது வெளிப்படை.

Scanned with CamScanner

முறையெழுத்திற் கற்றோர்க்குத் திருத்தெழுத்துப் பயிற்சியும், திருத்தெழுத்திற் கற்பவர்க்கு முறையெழுத்துப் பயிற்சியும் அங்கிங்கெனாதபடி எங்கும் கொடுக்கவேண்டும். தமிழ் நீண்டு விட்டது என மக்களும் உலகோரும் தமிழை மேலும் குறை கூறி ஒதுக்குவர். முதற்கண் வெளிப்படுத்தியபடி, தமிழைத் தேவ நாகரி எழுத்தில் எழுதலாம் என்றும், உலகளாவிய உரோமன் வடிவில் எழுதலாம் என்றும் இந்தியவொருமைப்பாடும் உலக- வொருமைப்பாடும் பாடுவதாய் முடியும். திருத்தம் தமிழுக்கே நிறுத்தமாகிவிடும். ஆனால் இப்போலித் திருத்தம் வாராது; முறையெழுத்தின் வழியே தமிழ் வளரும், நிலைபெறும் என்பது என் போல்வார் துணிபு.

தினமணியின் பொறுப்பு:

தினமணியிதழ் தமிழெழுத்துச் சீர்திருத்தம் பற்றி மிக்க ஈடு- பாடு காட்டி ஆசிரியவுரை எழுதுகின்றது. எழுத்துச் சீர்திருத்- தக் கொள்கைக்குப் பல பக்கங்கள் ஆதரவு தருகின்றது. இ'து அந்த இதழின் அறம். அதனால் அதற்குப் பொறுப்பும் கடமை- யும் உண்டு. தினமணி இதழாரை நான் வேண்டுவது ஒன்றுண்டு. ஒருநாள் தினமணி இதழ் முழுவதையும் முறையெழுத்திலும், முழுமையமைந்த சீர்திருத்த எழுத்திலும் இரு வடிவிலும் பதிப்- பிக்க வேண்டும். தாள், மை, உழைப்பு. காலம், சுருக்கம், அகலம், செலவு, விலை என்ற கூறுகளையெல்லாம் கணிப்பானால் இருவகை வடிவிற்கும் ஒப்பிட்டுக்காட்ட வேண்டும். திருத்- தெழுத்தால் என்ன வகையிற் பயனுண்டு, தமிழ் வளர்ச்சியுண்டு என அறுதி செய்யவேண்டும். இப்படிச் செய்யலாம் எனக் குழிக்- கணக்கு வகையிற் சொல்லிக் கொண்டிருப்பது அறிவியலாகாது. மேற்சொல்லியபடி இரு வகை வடிவின் பதிப்பு முறை ஒப்பீடே மெய்விளக்கமாகும்.

ஒருநாள் தினமணி இதழை இருவடிவிலும் பதிப்பிப்பதோடு, கம்பர் இராமாயணத்தின் நூறு செய்யுள்களை முறையாலும் திருத்தத்தாலும் பதிப்பித்துக் காட்டவேண்டும். மேற் சுட்டிய- படி தாள் முதலிய கூறுகளையும் கணித்துக் காட்டவேண்டும்.

எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் நல்லவர்கட்கு இதுவே என் வேண்டுகோள். உண்மையாகவே தமிழுக்கு நன்மை வருமாயின், இகலின்றி ஏற்று ஒத்துழைப்பதே புலவர் தம் கடமை. கருத்துக்- கும் அஞ்சவேண்டியதில்லை. மழலை முதல் எத்துறையிலும் முழுப் பயிற்றுமொழியாகித் தமிழ் உரிமையோடு வளர்வதே நம் இன்பம்.

தமிழின் பொது மதிப்பு:

தமிழ்க் குழந்தைகள் ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன், வட மொழி, இந்தி, தெலுங்கு, கன்னடம் முதலான பல மொழிகள் படிக்கின்றன. அம்மொழிகளுக்கெல்லாம் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பேச்சில்லை. தமிழுக்கு மட்டும் எழுத்துத்திருத்தம் எனக்

கற்பிக்கும்போது, முன்பே பிறமொழிக் காதல் (மோகங்கள்) கொண்டு வளரும் நம் குழந்தைகளுக்குத் தாய்த் தமிழ் பற்றிய சிறிய இழிவுணர்வும் கசப்பும் ஊட்டப்படுகின்றன. உலக மொழிகளுக்குள் தொன்மையும், தொன்மொழிகளுள் இன்று வரை தொடர்ந்த மக்கள் வழக்கும் உடையது தமிழ்மொழி என்று ஒரு பக்கம் பல பெருமை பேசும் போது, இவ்வளவு பெருமையுடைய மொழி என்று சொல்கின்றார்களே; இதற்கு எழுத்து வடிவுகூடச் சரியில்லையாமே எனப் பகடி செய்ய இடங்கொடுத்துக் கொண்டு வருகின்றோம். இந்தியவரங்கிலும், உலகவரங்கிலும், கல்வியுலகிலும் தமிழுக்கு உண்மையல்லாத, தேவையல்லாத பழியையும் இழுக்கையும் நாம் மூலகாரணமாகப் பரப்பி வருகின்றோம்.

எழுத்துச் சீர்திருத்தத்தின் பரப்புரை தமிழை எங்கே போய் முடக்குமோ? இத்தீயவிதை என்ன விளைவு செய்யுமோ? வளர்ச்சிக்கு மெய்யான மொழி நெறிகளை எப்படி மறைக்குமோ? ஏனைப் பல மொழிகளைக் காட்டினும், ஒலியால், ஒலிப்பால், எழுத்தால், செறிவால், நுட்பத்தால், பண்பால், வரலாற்றால், நிறைவுடைய தூய செந்தமிழுக்கு மட்டும், ஏனை மொழிகட்கு இல்லாத எழுத்துக் குறையுண்டு என்று அன்னையின் அடிவயிற்றில் கை வைக்க வேண்டாம். இதுவே ஒப்பியல் அறிவுடைமையாகும். உள்ள நல்ல சீர்மையை உணர முடியாவிடினும், உள்ள சீரைக்கெடுத்து அல்லதைப் பரப்பவேண்டாம். இந்தியவொருமை, உலகவொருமைகளையெல்லாம் திரித்துப் பேசித் தமிழொருமையையும் தமிழ் வடிவையும் சிதைப்பது மொழி மாசாகும், தமிழ்க்கொல்லியாகும். ''உள்ளது சிதைப்போர் உளரெனப்படாஅர்'' என்பது கழகத் தமிழ் காட்டிய முன்னேற்றச் சீர்மை. இவ்வுண்மையைத் தன்னறிவோடும் தமிழ் மானத்தோடும் கடைப் பிடிப்போமாக. 0

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா	24.00
அரையாண்டுக் கட்டணம்	:	,,	12.00
தனியிதழ்	:	,,	2.00

"தமிழ்ச்சிட்டு"

ஆண்டுக் கட்டணம்	:	உருபா	12.00
தனியிதழ்	:	,,	1.00

ஓரிதழுக்கு உருபா 2-00 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!
'தமிழ்ச்சிட்டு', சென்னை-5

நூற்சுருக்கம்:

பாரதி வளர்த்தது பார்ப்பனீயமே!

தஞ்சாவூர் வெற்றிமணி,

நூல், பாரதி வளர்த்தது பார்ப்பனீயமே.
விலை: ஓர் உருபா. காலம்: மே. 1981,
வெளியீடு: அமலி பிரசுரம், 'ஆவே மரியா'
அருளானந்தா நகர், தஞ்சாவூர் 613 007.

''அறிவியல், சமயம், அரசியல், குமூகம்—இவை தொடர்பான எல்லா உரைகளுக்கும், அறிக்கைகளுக்கும், வாயுறுதிகளுக்கும் பின்புலமாக, ஏதாவது ஓர் இனத்தின் நலன்கள் இருக்கும். இதைக் கண்டுபிடிக்கக் கற்றுக் கொள்ளும் வரையில், அரசியலில் மக்கள் ஏமாற்றுக்கும் தன்னிழப்புகளுக்கும் எப்பொழுதுமே பலியானார்கள்; இனியும் பலியாவார்கள்.''

—இலெனின், 'மார்க்சியத்தில் மூன்று தோற்றுவாய்களும், மூன்று உள்ளடக்கக் கூறுகளும்'.

இந்தியாவை முழுவதுமாகப் பற்றியுள்ள நோய், காந்தி மயக்கவெறி (போதை)என்றால், தமிழ் மண்ணை முற்றிலும் பற்றி, இக்கால் மற்ற மண்களுக்கும் பரவத் தொடங்கியுள்ள நோய் பாரதி மயக்கவெறி(போதை) ஆகும்.

ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பேயே காந்தி 'போதை', பாரதி 'போதை' பற்றி உலகுக்கு எடுத்துரைத்தவர் தந்தை பெரியார், பாரதியின் படைப்புகளில் நல்லவற்றைத் தேடுவது, 'மலத்தில் அரிசி பொறுக்கும் வேலை' என்று எச்சரித்தார் அவர். பின்னர், அன்னை மணியம்மை 'உண்மை' இதழில் பாரதியின் பார்ப்பனப் பற்றினைத் தக்க அடிப்படைகளுடன் விளக்கிக் கட்டுரை வரைந்தார். அதன்பின் அண்மையில் (1979-திசம்.) பாவலரேறு பெருஞ்சித்திரனார், 'ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்' என்ற நூலில் பாரதியின் பார்ப்பனப் பற்றினைப் பல்வேறு சான்றுகளுடன் தெளிவுபடுத்தினார்.

''வல்லாளுமையை வலுவிழக்கச் செய்யும் எந்த ஒரு போராட்டமும், அது யாரால், எந்த நோக்கில் தொடுக்கப்பட்டிருந்தாலும், ஐயத்திற்கு இடமில்லாமல், அது,புரட்சிப் போராட்டமே ஆகும்'' என்பது இசுடாலினின் கருத்து ஆகும். (நூல்: இலெனினியத்தின் அடிப்படைகள்''—ஆங்கில நூல். பக் 77.)

எனவே, தந்தை பெரியாருடன், அன்னை மணியம்மையுடன், பாவலரேறு பெருஞ்சித்திரனாருடன், கருத்து வேறுபாடு கொண்டுள்ள பார்ப்பனிய எதிர்ப்பாளர்கள், 'பாரதி' போதை'யினை அம்பலப் படுத்திய அவர்களின் தொண்டு, பார்ப்பனீயத்தை வலி விழக்கச் செய்த தொண்டே என்பதனை ஒப்புக்கொள்ளவேண்டும்.

'பாரதியே பார்ப்பனீயத்தைச் சாடியவன் ஆயிற்றே. பொதுவுடைமைக் கொள்கையைப் புகழ்ந்தவன் ஆயிற்றே, எனவே அவனைச் சாடுபவர்கள் பிற்போக்காளர்களே' என்று 'முற்போக்-

கு'ப் பேசுபவர்களுக்குப் பல்வேறு சான்றுகளுடன் தெளிவு ஏற்படுத்தும் முயற்சியே இந்நூல்!

'மார்க்சியக் கருத்தாளர்கள்', 'முற்போக்குக் கருத்தாளர்கள்' என்று தம்மைத் தாமே கூறிக் கொண்டாலும், அவர்களின் உழைப்பு எதற்குப் பயன்படுகிறது என்பதனைப் பொறுத்தே, அவர்கள் உண்மையாகவே 'முற்போக்கு'க்கு உழைத்தார்களா? அல்லது 'பிற்போக்குக்கு உழைத்தார்களா?'' என்பது தெளிவாகும்.

எனவே, முற்போக்கு முத்திரை குத்தப்பட்டவர்கள் எல்லாரும் முற்போக்காளர்கள் அல்லர். 'பிற்போக்கு' முத்திரை குத்தபட்டவர்கள் எல்லாரும் பிற்போக்காளர்கள் அல்லர்.

பாரதியின் சாதி எதிர்ப்பு—ஒரு கவட நாடகமே!

சாதிக் கொடுமைகளை மேற்போக்காகச் சாடுவதுபோல் சாடி, சாதி எதிர்ப்புணர்ச்சியைத் தணித்து, வருணாசிரமத்தை நிலை நிறுத்த முயன்ற முயற்சி, பாரதிக்கும் காந்திக்கும் உள்ள ஓர் அரிய ஒற்றுமை ஆகும்.

'சாதிகள் இல்லையடி பாப்பா'! என்ற பாடலில் கூட இந்தக் கவட நாடகத்தைத் தொய்வின்றி நடத்துகிறார் பாரதி.

''வேதம் உடையதிந்த நாடு—நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு!
சேதம் இல்லாத ஹிந்து ஸ்தானம்—இதைத்
தெய்வ மென்று கும்பிடடி பாப்பா!
சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!

'காருவா (அமாவாசை), வெள்ளுவா (பௌர்ணமி) என்பன போன்று, 'பொதுவுடைமைக் கொள்கையாளன் சார்மன்னன்' என்பது போன்று, மாந்தனை நாயினும், பன்றியினும் இழிவாக மதிக்கும் வருணாசிரமத்தை ஆணிவேராகக் கொண்டதை ''சேத மில்லாத ஹிந்துஸ்தானம்'' என்று சொல்லி, அதனைத் 'தெய்வம்' என்று கும்பிடச் சொல்கிறார் பாரதி.

(இக்கருத்தை இன்னும் சிறப்பாக -சரியாக- விளக்கும் வகையில் இதழாசிரியர் குறிப்பு:

தமிழகத்தில் உள்ள சாதிகள் தொழில்களை அடிப்படையாகக் கொண்டு பண்டைத் தமிழர்களிடம் தோன்றியவை. அவை ஆரியர்களால் வகுக்கப் பெற்றவையோ, அவர்கள் வந்த பின் தோன்றியவையோ அல்ல. அவை தமிழருடைய நாகரிக, பண்பாட்டு வாழ்வியல் அடிப்படையில் தோன்றியவை என்பதை வரலாற்றடிப் படையில் முதலில் நாம் கவனிக்கவேண்டும். அவை தோன்றிய காலத்திலோ, பின்னர் ஆரியர் தென்னாடு வரும் வரையிலோ அவற்றில் இழிவு தாழ்வு இல்லை; உயர்வு சிறப்பு இல்லை; மக்களை வேறு பிரிக்கும் கீழ்மை உணர்வு இல்லை. தொழில்

அடையாளப் பெயர்க் குறியீடுகளாகவே அவை இருந்தன. 'சாதி' என்ற சொல்லும் தூய தமிழ்ச் சொல்லே. இச்சொல் ஆரியர் வருவதற்கு முன்பே தோன்றியிருந்த சொல்; சாதி என்பது உயிர்களின் தொகுதியைக் குறிக்கும் சொல்; உயர் திணைக் கூட்டத்தை மட்டுமன்றி, அஃறிணைக் கூட்டத்தையும் இச்சொல் குறிக்கும்,

ஆனால், ஆரியர்கள் கொணர்ந்தது வர்ணாச்சிரமமே. வர்ணாச்சிரமம் என்பது நிறவொழுக்கம், இது நிறவேறுபாட்டை-பிறப்பை, அடிப்படையாகக் கொண்டது: கறுப்பு, பழுப்பு, சிவப்பு, வெளுப்பு ஆகிய நான்கு வண்ண வேறுபாடுகளில், ஆரியர்கள் மக்களைப் பிரித்தனர். பிராமணன் வெளுப்பு; க்ஷத்திரியன் சிவப்பு; வைசியன் பழுப்பு; சூத்திரன் கறுப்பு. இந் நிற வேறுபாடு ஆரியர்களுள்ளும் இருந்தன. வசிஷ்டன் ஆரியன், ஆனால் பிராமணன். இராமன் ஆரியன்; ஆனால் க்ஷத்திரியன். காந்தி ஆரியன்; ஆனால் வைசியன்; விசுவாமித்திரன் ஆரியன்; ஆனால் சூத்திரன்.

ஆரியர்கள் தென்னாடு வந்து, தூய தமிழரோடு கலக்கத் தொடங்கிய பின்னர், தமிழரின் தொழிலியல் சாதிப்பாகுபாடுகளும், ஆரியரின் வர்ண வேறுபாடுகளும் ஒன்றாகக் கலந்து உயர்வு தாழ்வு கற்பிக்கும் வேறுபாடுகளாக வளர்ந்து, வர்ணாச்சிரமத்தை அடிப்படையாகக் கொண்டு, படிநிலை வளர்ச்சியுற்று, இன்றைய சாதி வேறுபாடுகளாக நிலை பெற்றன. அக்கால் சாதி என்னும் தூய தமிழ்ச் சொல்லும் ஜாதி என்னும் வட சொல்லாக மாறுகிறது. ஒருவாறு இந்நிலைகளை ஓர் ஒப்புமையால் விளக்கவேண்டுமெனில், தொழில் வேறுபாட்டுப் பழந்தமிழர் சாதி அமைப்பைத் தூய தமிழ் போலும், ஆரியரின் பிறப்பு, நிறவேறுபாட்டு வர்ணப் பிரிவை சமசுக்கிருதம் போலும், இரண்டும் கலந்த இன்றைய ஜாதி வேறுபாடுகளைக் கலப்புத் தமிழ் போலும் கருதிக் கொள்க.

இந்நிலையில் ஜாதி உணர்வை ஒழிக்கக் கருதிய காந்தி, பாரதி போன்ற ஆரிய வைசியர்களும், ஆரியப் பார்ப்பனர்களும், தமிழர்களின் சாதி வேறுபாட்டால் வளர்ந்து நின்ற ஜாதி உணர்வுகளைக் கடிந்தார்களே தவிர, ஆரியர்களின் மூலப் பிறவி வேறுபாடுகளை உட்கிடையாகக் கொண்ட வர்ணாச்சிரம வேறுபாடுகளை நிலை நாட்டவே விரும்பினர். இவ்வரலாற்று அடிப்படையாகக் கொண்ட கருத்துகளை மேலும் விரிக்கில் பெருகுமாகையால், இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம். இவற்றின் விரிவை, எம் திருக்குறள் மெய்ப் பொருளுரையில் பரக்கக் கூறுவோம்.

— பெருஞ்சித்திரனார்: இதழாசிரியர்.

இனிப்புப் பலகாரத்தினுள் நஞ்சினை வைத்து வழங்கும் வேலையைச் சிறப்பாகச் செய்தவர் பாரதி என்பதனைப் பின்வரும் பாடல் தெளிவு படுத்துகிறது:

"வேதம் அறிந்தவன் பார்ப்பான்—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்!

நீதி நிலை தவறாமல்—தண்ட
நேமங்கள் செய்வான் நாய்க்கன்!

பண்டங்கள் விற்பவன் செட்டி –பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி!
தொண்டரென் றோர்வகுப் பில்லை—தொழில்
சோம்பலைப் போல் இழிவில்லை.

நாலு வகுப்புமிங் கொன்றே!—இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிட சாதி!

சாதிப் பிளவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்!
நீதிப் பிரிவுகள் செய்வார்!—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்!

சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்!

மாவட்ட அதிகாரி தம் ஏவலாளைப் பார்த்து, "நம் பணிகளில் உயர்வு தாழ்வு கிடையாது. அப்படி இருப்பதாகச் சொல்பவர்கள் வீண் வேற்றுமைகளையும், சண்டைகளையும் தூண்டுபவராவார்" என்று சொன்னால், ஏவலாள், தம் காதில் அதிகாரி பூச்சுற்றுவதாகத்தான் நினைப்பார். அதை அதிகாரியிடம் நேரடியாகச் சொல்லமுடியாத நிலைதானே அவரின் நிலை. சாதிகளைச் சரியென்று ஏற்றுக் கொண்டு, அவற்றில் ஒன்று குறைந்தாலும் மாந்த சாதி செத்துவிடும் என்று கணியம் (சோதிடம்) சொல்லி விட்டு (உண்மையில் பார்ப்பன சாதி குறைந்தால் தாக்கம் கிடையாது. பயன் உண்டு.) 'சாதிப் பிளவுகள் இல்லை... குலத்தில் உயர்வு, தாழ்வு சொல்வது பாவம்' என்று பூச்சுற்றினால், பாரதி சுற்றும் பூவாயிற்றே என்று நம்மில் பலர் விரும்பி ஏற்றுக் கொள்கின்றனர்.

பாரதியின் படைப்புகளை ஆராயும் போது, அவரின் 'வர்ணாச்சிரமப் பித்து' நிறைய இடங்களில் வெள்ளிடை மலையாகவே தெரிகிறது. எடுத்துக் காட்டாகக் 'கண்ணன் என் தந்தை'யில்

நாலு குலங்கள் அமைத்தான்—அதை
நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்

என்கிறார் பாரதி.

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்

Scanned with CamScanner

செய்திகள்.

(1) குணசோதி—இராசேந்திரன் வாழ்க!

சென்ற தி. பி. 2020, சுறவம் 28 (10-2-89)ஆம் நாள் வெள்ளிக்கிழமை, சென்னை, மயிலார்ப்பூர், அப்பர்சாமி கோயில் தெரு 121-ஆம் எண் இல்லத்தில், தஞ்சை. தீவாமங்கலம், இரத்தனசாமி அவர்களின் மகள் செல்வி. குணசோதிக்கும், சிதம்பரம், நடேசன் அவர்களின் மகன் செல்வன். இராசேந்திரனுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில், தமிழ்த் திருமணம் இனிதே நடைபெற்றது. திருமணத்தைத் திருக்குறள் மணி, புலவர். இறைக்குருவனார், பொற்கொடி இறைக்குருவனார் ஆகியோர் முன்னின்று நடத்தினர். அறிஞர் பலர் மணமக்களை வாழ்த்திப் பேசிய பின்னர், இனிய விருந்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

(2) வெற்றிச்செல்வி—சிவராசு வாழ்க!

கடந்த 10—3—89 வெள்ளிக்கிழமை, மயிலார்ப்பூர், கபாலீசுவரர் கோயில் மண்டபத்தில், தென்மொழி அச்சகத்தில் கோப்பாளராகப் பணியாற்றும், கடமையுணர்வும் தொண்டார்வமும் உள்ள பெண், செல்வி. வெற்றிச்செல்வி எனப்படும் விசயலட்சுமிக்கும், செல்வன். சிவராசுக்கும், திருமணம் இனிதே நிறைவேறியது. ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் திருமணத்திற்கு முன்னிலையிருந்து மணமக்களை வாழ்த்தித் தென்மொழிச் சார்பாக அன்பளிப்புச் செய்தார். அச்சகப் பணியாளர்கள் அனைவரும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

(3) மலர்விழி—இளங்கோவன் வாழ்க!

சென்ற மீனம் 13 (26—3—88)ஆம் பக்கல் ஞாயிறு காலை 9 மணியளவில், திருவாரூர், கமலாலயம் வடகரை, பி. ஆர். எம். திருமண மண்டபத்தில், நெய்வேலியைச் சார்ந்த நெடுநாளைய தென்மொழியன்ரும் தூயதமிழ்ப் பற்றுளரும் ஆகிய திரு. கணபதி- நீலா இணையரின் மகன் செல்வன். க. இளங்கோவனுக்கும் கற்கத்தி ஆசிரியர் திரு, பாசம். கலியமூர்த்தி—செயலட்சுமி இணையரின் மகள் செல்வி க. மலர்விழிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையிலும், நன்னிலம் ஒன்றியப் பெருந்தலைவர் திரு. வரத. கோபாலகிருட்டிணனன் அவர்கள் முன்னிலையிலும் திருமணம் இனிதே நிறைவுற நடந்தது. மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள், திருக்குறள் மணி, புலவர். இறைக்குருவனார், இலக்கணப் புலவர் த.ச, தமிழனார், கதிர். தமிழ்வாணன், கு. குப்புசாமி, கோ. கண்ணன், செல்வராசு. தா. அன்புவாணன், திருவாட்டி தமிழரசி அறவாழி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் மணமகன் க. இளங்கோவன் நன்றி நவின்றார்.

Scanned with CamScanner

(4) கொற்கைமாறன் — தமிழரசி — வாழ்க!

கடந்த மேழம் 11-(24-4-89)-ஆம் பக்கல் திங்கட்கிழமை காலை $10\frac{1}{2}$ மணியளவில், நெல்லை, குட்டத்தில், சிறுத்தொண்டநல்லூர் புலவர்: ச. சிவசங்கு—சரசுவதி சிவசங்கு இணையரின் மகன் திரு. செல்வன் கொற்கைமாறனுக்கும், செல்வி தமிழரசிக்கும், திருமணம் நிகழ்ந்ததைத் தொடர்ந்து, மேழம் 17 (30-4-89) ஞாயிறு மாலை 4 மணியளவில், சென்னை, பெரவள்ளூர், தாள் ஆலைச்சாலை, 9, இலக்குமணநகர், புகழ்வேந்தன் இல்லத்தில், மணமக்கள் வரவேற்பு விழா நடைபெற்றது.

விழாவிற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்தி வைத்தார்கள். இவ்விழாவில் பாவலரேறு குடும்பமும், திருக்குறள்மணி. புலவர். இறைக்குருவனார் குடும்பமும் கலந்து கொண்டு மகிழ்வூட்டினர். மணமக்களை சென்னையிலுள்ள நெல்லைச் செல்வர்களும் வணிகப் பெருமக்களும் வாழ்த்தி வரவேற்றனர். மணமகன் வீட்டார் சார்பாக வந்திருந்தார் அனைவர்க்கும் இனிய விருந்து படைக்கப் பெற்றது. விருந்தின் முடிவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், திருக்குறள்மணி. புலவர் இறைக்குருவனார், தாமரை பெருஞ்சித்திரனார் ஆகியோர் மணமக்களை வரவேற்று வாழ்த்தி நல்லுரைகள் வழங்கினர். தொடக்கத்தில் புலவர் சிவசங்கு அவர்கள் வந்திருந்தார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாலை 7 மணியளவில் விழா இனிது நிறைவுற்றது.

(5) அகில்—பிரபு—வாழ்க!

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2020, விடைத்திங்கள் 1 (14—5—89) ஞாயிற்றுக்கிழமை, வெங்காலூர் (பெங்களூர்) சிவாசிநகர், தூய பவுல் தேவாலய மண மண்டபத்தில், காலை 10-30 மணியளவில், நெடுநாளையத் தென்மொழி அன்பரும், தமிழீழ விடுதலைப் புலிகள் தோழமைக் கழக உறுப்பினரும் ஆகிய அறவாழி-அனுசுயா இணையரின் மகள் செல்வி அகிலுக்கும். சைமன்-மார்கரெட் இணையரின் மகன் செல்வன் பிரபுவுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் தமிழ்த்திருமணம் இனிதே நடந்தேறியது.

தொடக்கத்தில் செம்பரிதி பொறுப்பாசிரியரும், தமிழின விடுதலையுணர்வுப் பாவலரும் முன்னாள் தென்மொழி அமைச்சரும் ஆகிய மகிபை-பாவிசைக்கோ அவர்கள் அனைவரையும் குளிரிளிய தமிழில் வரவேற்றுப் பேசினார். பின்னர் தலைவர் திருமணத்தை நிகழ்த்தி வைத்து மணமக்களை வாழ்த்திப் பேசும் முகத்தான் அரிய இனநலஞ்சார்ந்த தமிழர் வாழ்வியல் கருத்துகளை எடுத்துரைத்தார். அவரையடுத்து, மணமக்களை வாழ்த்தி, கருநாடகத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் ப. சண்முக சுந்தரம், சேலம் மாவட்டத் திராவிடர் கழகச் செயலாளர் கொளத்தூர் தா. செ. மணி, ஆகியோர் நல்லுரை வழங்கினர். அதன்பின் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் க. மு. அவர்-

பட்டியல் : 12:

தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி, சுவடி 20 : ஓலை 5-6 இல் வெளியிடப் பெற்ற அறிக்கையின்படி தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்று தவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல் கீழே கொடுக்கப் பெறுகின்றது. (1-5-88 முதல் 30-1-89 வரை).

1. வாழ்நாள் உறுப்பினர்கள் :

தென்மொழி	உருபா:
41. புலவர் வே. தமிழ்மாறன், அம்மன்புரம்	200.00
42. கோ. கருணாநிதி, வெங்கானூர்	320.00

2. பத்து உறுப்பினர்கள் சேர்த்த பயனுறு தொண்டுள்ளப் பேராளர்கள்:

தென்மொழி	
13. தமிழாகரர், கலைமாமணி. முனைவர் ஆறு. அழகப்பனார், தமிழ்த்துறைத் தலைவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (62 × 24)	1500.00

3. நன்கொடை நல்கிய நல்லருளாளர்கள் :
(4-5-88 முதல் 30-1-89 வரை)

1. குமர. தன்னொளியன், வேலூர்	8.00
2. க. பழனியப்பன், திருச்சி (மே மாத கொடை)	30.00
3. அ. விசுவநாதன், சேலம்	15.00
4. கழராம்பன், இளவேனில், திண்டுக்கல்	100.00
5. சீதா உதயகுமார், ஐதராபாது (இராமதுரை வழி)	14.00
6. கோ. கருணாநிதி, வெங்கானூர்	200.00
7. வீர. செல்லக்கண்ணு, கோயமுத்தூர்	64.00
8. சீ. மலர்வேந்தன், குறும்பூர்	10.00
9. து. வேலுச்சாமி, அரியலூர்	6.00
10. அருண்மொழி, கல்லக்குறிச்சி	1.50
11. வே. காந்தி, வெங்கானூர் (சூலை மாதக் கொடை)	10-00
12. ஒடவை. தமிழ்வேந்தன், ஒட்டன் சத்திரம்	12-50
13. என். சி. அமைச்சியப்பன், மலேசியா	45-00

(முன் பக்கத் தொடர்ச்சி)

களும், தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் பா. மு. தமிழ்க்குடிமகன் அவர்களும் மணமக்களை வாழ்த்தி அரிய உரைகள் நிகழ்த்தினார்கள். நிகழ்ச்சி முடிவில் கோடரி (ஆக்சு) என்னும் ஆங்கில இதழ் ஆசிரியர் வேதகுமார் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

14. இல. வேலரங்கன், சிவகங்கை 16.00
15. பூங்குன்றன், அரச்சலூர் 10-00
16. கே. இளங்கோ, வெங்காலூர் 3-00
17. நா, அன்புச்செல்வன், திருப்பராய்த்துறை 10-00
18. கே. ஆறுமுகம், வெங்காலூர் 50,00
19. க. பழனியப்பன், திருச்சி, (சூன், சூலை, ஆகத்து, செப்டம்பர், அக்டோபர் மாதக் கொடை) 100-00
20, கி, அரசத்தொகையன், ஆதம்பாக்கம் (அக்டோபர் மாதக் கொடை) 20,00
21. க. அன்புச்செல்வம், வெங்காலூர் 25.00
22. கணேசன், புதுக்கோட்டை 3.00
23. அருள்மணி, வெங்காலூர் 10.00
24. உ.ச.எழில் செட்டிக்குறிச்சி,(நவம்பர் மாதக் கொடை) 10.00
25. இராசகோபாலன், உ. செல்லூர் (நவம்பர் மாதக் கொடை) 5.00
26. மு. இராமலிங்கம். திட்டக்குடி 25.00
27. உரோசுமேரி, புதுவை 50.00
28. நாசர் அலி, திருச்சி 20.00
29. குமர. தன்னொளியன், வேலூர் 400.00
30. இ. முத்துசாமி, தெய்வநாயகப்பேரி 25.00
31. அ.ச. சுப்பு, பூடான் 50.00
32. வே. காந்தி, வெங்காலூர் (நவம்பர் மாதக் கொடை) 20.00
33. க. பழனியப்பன், திருச்சி (நவம்பர், திசம்பர் மாதக் கொடை) 50.00
34. கி. அரசத் தொகையன், ஆதம்பாக்கம் (திசம்பர் மாதக் கொடை) 25.00
35. பறம்பை அறிவன், பரமக்குடி 25.00
36. உ. ச. எழில், செட்டிக்குறிச்சி (திசம்பர் மாதக் கொடை) 10.00
37. கு. சோதிப்பிரகாசம், விசாகப்பட்டினம் 200.00
38. த. வேலுச்சாமி, பல்லடம் 200.00
39. இராதா கிருட்டிணன், புதுவண்ணை 25.00
40. கா. இராசகோபாலன், உளுந்தூர் பேட்டை (திசம்பர் மாதக் கொடை) 5.00
41. க. பழனியப்பன், திருச்சி (சனவரி மாதக் கொடை) 50.00
42. உ.ச.எழில்,செட்டிக்குறிச்சி (சனவரி மாதக் கொடை) 10.00
43. நாவை. சிவம், மணப்பாறை 14.00
44. ப. முருகவேள், மேலூர் 9.00
45. வே. காந்தி, வெங்காலூர் (சனவரி மாதக் கொடை) 50.00
46. மதுரை, தமிழ்நாடன், மதுரை 7.50
47. நலங்கிள்ளி, பொன்னேரி 4.00
48. இராசகோபாலன், உளுந்தூர்பேட்டை (சனவரி மாதக் கொடை) 5.00
49. அருள்மணி, வெங்காலூர் 100.00

Scanned with CamScanner

கிடைக்கும் பணத்தில் ஏறத்தாழ பாதி அஞ்சல் செலவு செய்து அனுப்பிவைத்தது பல பேருக்குப் பயன்பட்டது: தங்கள் தொண்டுள்ளம் சாலச் சிறந்தது. மேலும் தேங்கிக்கிடக்கும் நூற்கள் இருந்தால் சலுகை விலைக்கு மக்களுக்குக் கிடைக்கச் செய்யுங்கள்.

அன்புடன்,

—இ. முத்துசாமி, இலத்திகுளம்; (நெல்லை)

○ ; 1363 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு! தங்களுக்குப் பணிவான என் வணக்கங்கள்:

சென்ற இதழில் வெளிவந்திருந்த காலஞ்சென்ற முனைவர் திரு. வ. சுப. மாணிக்கம் அவர்களின் கட்டுரையைப் படித்தேன். அதன் மூலம் எழுத்துச் சீர்திருத்தம் என்பது தேவையற்றது என்பதை அறிந்து கொண்டேன்,

தமிழகத்தில் தமிழல்லாத பிறமொழிப் பயிற்றுப் பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக வைக்கவில்லை என்று ஐதராபாது அன்பர் திருவாட்டி: கீதா உதயகுமார் அவர்கள் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மை. தமிழை ஒரு பாடமாகவே வைக்காத நிலை உள்ளபோது தமிழ் வழிக் கல்வி என்பது எவ்வளவு அரிய முயற்சி என்பது விளங்குகின்றது. தமிழ் வழிக் கல்வி என்றாலே பழமை விரும்பிகள், தமிழ் வெறியர்கள் என்று முத்திரை குத்தி ஒதுக்கி விடுகின்றனர். அவர்கள் கூற்றில் உள்ள உண்மையை ஆராய மறுக்கின்றனர். இன்னுஞ் சிலரோ, தமிழில் படித்தால் அறிவு வராது என்று அறிவுக்கே புதிய வரையறை கொடுக்கின்றனர்.

இது ஒரு புறமிருக்க, தமிழை-தமிழில்—படித்தவர்க்குத் தமிழகத்திலேயே மதிப்புமில்லை-வேலை வாய்ப்பில் முன்னுரிமையும் இல்லை எனும்போழ்து, தமிழில் படிக்க முன்வராதவர்களைக் குறைகாணவும் முடியாது. தமிழகத்தில் தமிழை-தமிழில்-படிப்பவர்கட்கு எதிர்காலம் ஒளிமயமாக அமைய அரசு உறுதி வழங்க வேண்டும். இனியாகிலும் தமிழக அரசு இது குறித்து நல்லதொரு முடிவை எடுக்கவேண்டும். தங்கள் உண்மையுள்ள.

—கோ. இரவிச்சந்திரன் சென்னை-54.

○ : 1364 : பெருமதிப்பிற்குரிய ஐயா,

தண்தமிழ் வரலாற்றிலே தென்மொழியின் பணி பொன் எழுத்துகளிலே பொறிக்கப்படும். தமிழ்ச் சான்றோர்கள், தமிழ் மொழியையும், தமிழரையும், தமிழ்ப் பண்பாட்டையும் காத்திடக் காலம் காலமாய் நடத்தி வந்த போராட்டம் நாம் அறிந்ததே. சாதியின் பெயரால், சமயத்தின் பெயரால், இயக்கங்களின் பெயரால், பிரித்தாளப்பட்டுவரும் தமிழ் இனத்தை, மொழி அடிப்படையிலே ஒற்றுமைப்படுத்திட முயலும் தங்களது பணி வெல்லும் காலம் வெகுதூரத்தில் இல்லை. ஆயின்,

'கவிதை'களால் திருத்திய காலம் மறைந்துவிட்டது
கத்தியால் திருத்தவேண்டிய காலம் பிறந்துவிட்டது.

'முடிவுதான் பாதையை உறுதி செய்கிறது? என்ற மார்க்சின் முத்து மொழியை, நேற்றைய இளைஞர்கள், அஃதாவது இன்றைய முதியவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டியது காலக் கட்டாயமாகிவிட்டது. ஈழத்திலே எரிகின்ற தீயின் பொறிகள் இங்கிருக்கும் இளைஞர்களின் உள்ளங்களில் விழுந்து, இவர்களின் விழிகள் சிவந்திருக்கும் நேரமிது. அரசியல் திறவோர்களின் அறிவிலே பதவி நாற்காலிகள் நடனமாடிக் கொண்டிருக்கின்றன. ஆகவே விடுதலை விரும்பிகள் அவர்களை நம்பமுடியாது.

எந்த மாநிலத்தைச் சேர்ந்தவரும் இந்தத் தமிழ்நாட்டை ஆளலாம் என்ற அளவிற்குத் தரம் தாழ்ந்துவிட்டது தமிழக அரசியல்காரர்கள் வரலாற்றில் ஏற்பட்டுவிட்ட கரும்புள்ளி; தென்மொழியின் பின்னிருக்கும் இளைஞர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம்; குற்றமில்லை; அடர்ந்த காட்டிலே அரிமாக்களின் எண்ணிக்கை எப்போதுமே குறைவுதான்; ஆயின் ஊளையிடும் நரிகள் ஒரு கோடி இருப்பினும், அரிமா எழுந்து நின்றால் நரிகள் நடுங்கிச் செத்துவிடும்.

ஐயா, அடர்ந்த காடுகளிலும், கொடிய சிறைகளிலும், குறுகிய குடிசைகளிலும், கொடி பறக்கும் கோட்டைகளிலும் ''விடுதலை விரும்பிகள்'' இருக்கின்றனர்; அவர்களின் உள்ளங்களில் நீங்கள் இருக்கின்றீர்கள். அவர்களின் அறிவிலே தென்மொழி என்ற தென்றல் வீசிக் கொண்டுதான் இருக்கின்றது. அந்தத் தென்றல் புயலாகும் காலம் தொலைவில் இல்லை; தங்கள் தொண்டு வெல்லும்! தமிழா விழித்தெழு! தமிழ்நாடு தமிழருக்கே! தங்கள் அன்பன், —பிரதாப்குமார், பெங்களூர்-10;

○ : *1365* : அன்புமிக்க ஐயா, வணக்கம்; நாளுக்கு நாள் பார்ப்பனீயம் தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் செய்யும் கொடுமைகளை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கத்தான் முடிகிறதே தவிர செயல்பட முடியவில்லை;

தாங்கள் ஒருவரே, தமிழினம் இன்றைக்கில்லாவிடினும், என்றைக்காவது விடுதலை பெற்றுத் தனி ஆட்சி நடைபெற எண்ணுகிறீர்கள்; அந்த உணர்ச்சி ஒரு சிலருக்கே இருக்கிறது. எனவே மேலும் விடுதலை உணர்ச்சியை மக்களிடம் வளர்க்க வேண்டிய கடமை நமக்குத்தான் இருக்கிறது போலத் தோன்றுகிறது; தமிழர்கள் பல நூற்றாண்டுகளாகப் பார்ப்பனீயத்தின் பின்னால் செல்லுகின்றனர். இதற்கெல்லாம் கரணியம் பட்டம், பதவி, பணக்குவியல்களைச் சேர்த்தால் போதும் எனத் தமிழன் கருதி வாழ்ந்து கொண்டிருக்கிறான்; பார்ப்பான் போடும் எலும்புத் துண்டுக்காகத் தமிழர்களே தமிழர்களைத் தொலைத்துக் கட்ட வீடணர்களாகச் செயல்படுகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். கலைஞர் ஆட்சியை நீக்கப் பார்ப்பனர் அனைவரும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ஒன்றுபோல் செயல்படுவதிலிருந்து நன்றாகத் தெரிகிறது; மூடத்தமிழன் இதைப் பார்த்துக் கொண்டும் தன்னுடைய இழிவு நிலையை எண்ணிப் பார்க்கவில்லை;

எனவே யாரையும் நம்பவோ நம்மோடு உழைப்பர் என்ற எண்ணமோ வேண்டாம்; விரைவில் தாங்கள் அடிக்கடி கூறுவதைப் போல மறைவதற்குள் தமிழ் நாட்டு விடுதலைக்கு எதையாவது செய்வேன் என்பதை நினைவு கூர்ந்து விரைவில் தமிழகக் கருத்துக்காகச் செயல்பட வேண்டுகிறேன்; எவருக்கும் தமிழுக்காகத் துணை நிற்க வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை அதை நினைத்து வருந்துகிறேன்; தமிழர்கள் பயனுள்ள செயலைச் செய்ய முன் வரவில்லை; இயன்ற அளவிற்குச் செய்தால் போதும் ஆனால் எவரும் முன் வரவில்லையே;

அதனால் இரக்கஞ் செய்து மக்களிடம் விடுதலை உணர்வை வளர்த்தெடுக்க வேண்டியச் செயல் திட்டங்களை உருவாக்க வேண்டுகிறேன்; விரைவில் ஒரு கருத்தரங்கைக் கூட்டித் திட்டம் செயல்பட முனைப்பாகுங்கள்; வணக்கம் தங்கள் அன்புள்ள.

அதிகமான், தாழையூற்று;